மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டு சோலை
70, 71A, சிறப்பு அங்காடி, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 25 வெள்ளிக்கிழமை (11 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 352

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெரு வெற்றி! சுமார் 20 லட்சம் பெரும்பான்மை வாக்குகள்!!

கொழும்பு, நவ. 11

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிகா குமாரதுங்க அமோக வெற்றியீட்டினார்.

இதுவரை நடந்த தேர்தலில் இல்லாதவாறு — வரலாறு காணாத முறையில் 62.28 சதவீதமான வாக்குகளைப் பெற்று — நாட்டின் நான்காவது ஜனாதிபதியாக அவர் வெற்றிவாகை சூடினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான சந்திரிகா ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிறிமா திஸாநாயக்காவை விட 19 லட்சத்து 93 ஆயிரத்து 922 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றியீட்டி, நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதியானார். அவர் பெற்ற மொத்த வாக்குகள் 47 லட்சத்து 09 ஆயிரத்து 205 ஆகும்.

மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் மொத்தம் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் சந்திரிகா குமாரதுங்காவே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

தேர்தல் தொகுதி ரீதியான தேர்தல் முடிவுகளின் பிரகாரம் பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த மஹியங்கனைத் தொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதிகளில் சந்திரிகாவே வெற்றியீட்டினார்.

இந்த வெற்றி இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரை நிலைநாட்டப்படாத சாதனையாகும்.

நேற்றைய தேர்தலில் சந்திரிகாவுடன் போட்டியிட்ட ஏனைய நான்கு வேட்பாளர்களும் படுதோல்வி அடைந்தனர்.

வடக்கு - கிழக்கிலும் சந்திரிகாவுக்கே அதிக வாக்குகள் கிடைத்தன.

எல்லாத் தொகுதிகளிலும் சந்திரிகாவுக்கு ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன.

(6ஆம் பக்கம் பார்க்க)

புதிய ஜனாதிபதியாக சந்திரிகா

நாளை மறுதினம் பதவி ஏற்பு

சந்திரிகா குமாரதுங்கா

அமைச்சர்களும் புதிதாக நியமனம்

கொழும்பு, நவம்பர் 11

புதன்கிழமை நடைபெற்ற மூன்றாவது ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 20 லட்சம் பெரும்பான்மை வாக்குகளால் பெருவெற்றியீட்டிய திருமதி சந்திரிகா குமாரதுங்கா—

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை உத்தியோக பூர்வமாக, வைபவ ரீதியாகப் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினமே புதிய அமைச்சரவையையும் அவர் நியமிப்பார் என்று அறியப்படுகிறது.

இலங்கையின் நான்காவது நிறைவேற்று ஜனாதிபதியாகவும், நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதியாகவும் மகோன்னத வெற்றியீட்டிய சந்திரிகா தமது பொறுப்பை நாளை மறுதினம் ஏற்றுக்கொள்வார்.

அதற்கு முன்னர் அவர் தமது பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்வார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா இன்று வெள்ளிக்கிழமை காலை பதவியேற்பதற்கு முன்னர் ஏற்பாடாகி இருந்ததாகவும் —

ஆனால் இன்று நவமி நாளானதால், சோதிடப்படி நல்ல நாள் இல்லை என்று சோதிடர்கள் வழங்கிய ஆலோசனையைத் தொடர்ந்து —

வைபவ ரீதியான பதவியேற்பு நிகழ்ச்சி ஞாயிறுக்கு மாற்றப்பட்டதாகவும் — அரசாங்க வேட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியாகப் பதவியேற்பதைத் தொடர்ந்து சந்திரிகா, புதிய அமைச்சரவையை நியமிப்பார். புதிய அமைச்சர்களும் அன்றே பதவி ஏற்பார் என்று அறிய வருகிறது.

(அ-எ-3)

ஐ.தே.கட்சியின் தலைவராக ரணில்

கொழும்பு, நவ. 11

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததை அடுத்து ஐ.தே.கவின் புதிய தலைவர் பதவியை ரணில் விக்கிரமசிங்கா ஞாயிறு பொறுப்பேற்கவுள்ளார்.

தற்போதைய கட்சித் தலைவரான டி.பி. விஜேதுங்கா ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகி செல்வதை அடுத்து ரணில்விக்கிரமசிங்கா தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளார்.

(ஐ)

கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், நவ. 11

கிளாலி – பூநகரி படகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-3)

அரசின் சமாதான முயற்சிக்கு மக்கள் தெளிவான ஆணை!

தேர்தல் முடிவு குறித்து சந்திரிகா

கொழும்பு, நவ. 11

எமது அரசாங்கம் ஆரம்பித்த சமாதான நடைமுறைக்கு கிடைத்த மிகத் தெளிவான ஆணையாக ஜனாதிபதித் தேர்தல் முடிவு அமைந்துள்ளது. இது மிகவும் குறிப்பிடத்தக்கது. காரணம் இச்சமாதான முயற்சிக்கு எதிராக—தீவிரமான— கீழ்த்தரமான—குரோதத்தை ஊட்டுகின்ற, — அபாயகரமான பிரசார இயக்கம் ஒன்ன பிரதான எதிர்க்கட்சி தேர்தலுக்கு முந்திய இரு வாரங்களாக நடத்தியது. அதற்கு மத்தியிலும் மக்கள் சமாதானம் குறித்து இந்த தெளிவான ஆணையை எமக்குத் தந்துள்ளது முக்கியமானதாகும்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரதமர் சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.

கொழும்பு இராஜகிரிய வில்—தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற— ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அறிவிக்கும் சம்பிரதாயபூர்வவைபவத்தில் நன்றி தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரின் பேச்சில் இடம் பெற்ற முக்கிய அம்சங்களாவன;-

இந்த இனவாதப் பிரசாரத்தை சிறிதளவு — அதிக

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொ.ஐ. முன்னணி எம்.பி வாகனவிபத்தில் மரணம்

கொழும்பு நவ.11

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் ஜோசெப் பெர்னாண்டோ நேற்றுக் காலை அகால மரணமானார்.

வென்னப்புவவில் துப்பரதெனிய என்ற இடத்தில் இடம் பெற்ற மோட்டார் கார்விபத்தில் அவர் மரணமானார்.

புத்தளம் கச்சேரியில் வாக்குகள் எண்ணப்படுவதை பார்வையிட்ட பின்னர் திரு. பெர்னாண்டோ கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இந் தவிபத்து நடந்தது. வாகனச்சாரதியும்இந்த சம்பவத்தில் உயிரிழந்தார். வாகனம் தீப்பற்றியதால் முழுமையாக சேதமடைந்தது. காரில் பாதுகாப்புக்கு சென்ற இரண்டு பொலீஸாரும் மற்றுமொருநபரும் காயமடைந்தார்கள். காயம் அடைந்தவர்கள் தற்பொழுது நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

அனுதாப அலையில் வாக்குகளைப் பெறலாம் என கருதிய ஐ.தே.க இருந்த வாக்குகளையும் இழந்தது

நெதர்லாந்து வானொலி கண்ணோட்டம்

கொழும்பு, நவ. 11

காமினி திஸாநாயக்கா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அனுதாப அலையில் வாக்குகளை அள்ளி வெற்றியீட்டலாம் என்று எண்ணி, அவரது மனைவி சிறிமாவை வேட்பாளராக நிறுத்திய ஐக்கிய தேசியக் கட்சி, தனக்கு இருந்த வாக்குகளையும் பறிகொடுத்துள்ளது.

நெதர்லாந்து வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இலங்கை ஜனாதிபதித் தேர்தல் பற்றிய கண்டோட்டத்தில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

நெதர்லாந்து வானொலியின் கொழும்புச் செய்தியாளர் ரீட்டா செஸ்தியன் இந்தக் கண்ணோட்டத்தை எழுதியிருந்தார்.

''பிரதமராக வந்த 81 ஆவது நாளில் இலங்கையின் முதலாவது பெண் நிறைவேற்று ஜனாதிபதியாக சந்திரிகா இன்று தெரிவானார். அரசியலில் அவரது துரித வளர்ச்சியை இது காட்டுகின்றது.

நாட்டின் அரசியல் வரலாற்றில் சாதனை படைத்துவரும் பண்டாரநாயக்காவின்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஒரே பார்வையில் தேர்தல் முடிவுகள்

சந்திரிகா குமாரதுங்கா (பொ. ஐ. மு.)	—	47 லட்சத்து 09 ஆயிரத்து 205 வாக்குகள்
சிறிமா திஸாநாயக்கா (ஐ. தே. க.)	—	27 லட்சத்து 15 ஆயிரத்து 283 வாக்குகள்
ஹட்சன் சமரசிங்க (சுயேச்சை)	—	58 ஆயிரத்து 886 வாக்குகள்
ஹரிச்சந்திர விஜேதுங்க (சி. ம. ச. பூ. மு. க.)	—	32 ஆயிரத்து 651 வாக்குகள்
ஏ. ஜே. ரணசிங்க (சுயேச்சை)	—	22 ஆயிரத்து 752 வாக்குகள்
நிஹால் கலப்பதி (ஸ்ரீ. மு. மு.)	—	22 ஆயிரத்து 749 வாக்குகள்
அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்	—	77 லட்சத்து 61 ஆயிரத்து 526 வாக்குகள்
பெரும்பான்மை வாக்குகள்	—	19 லட்சத்து 93 ஆயிரத்து 922 வாக்குகள்

பிரதமர் பதவியை ஸ்ரீமாவோ ஏற்பார்?

கொழும்பு, நவ. 11

தற்போதைய பிரதமர் சந்திரிகா குமாரதுங்க புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அடுத்து-

பிரதமர் பதவி யாருக்கு என்ற கேள்வி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பலத்த சர்ச்சையை உருவாக்கியிருக்கிறது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் முக்கிய அந்தஸ்தைப் பெற்றிருக்கும் தகவல், ஒலிபரப்பு, விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கைத்தொழில்துறை அமைச்சர் ரட்னசிறி விக்கிரமநாயக்கா ஆகியோர் இப்பதவிக்கு போட்டியிடுவதாகக் கூறப்படுகிறது.

எனினும் —

இப்பதவியை ஒருவருக்கு வழங்குவதன் மூலம் அரசுக்குள் ஏற்படும் கருத்து முரண்பாடுகள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவும் —

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை விரைவில்

(6ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடனான பேச்சு பதவி ஏற்றபின்பே முடிவு

கொழும்பு, நவ. 11

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் எப்போது பேச்சு நடத்துவது என்பது குறித்து ஜனாதிபதி பதவியேற்பு, புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணஞ் செய்வது ஆகிய நிகழ்வுகள் முடிவடைந்த பின்னரே ஆலோசிக்கப்படும்.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முன்கண்டவாறு பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

சிங்கள பௌத்தர்களுடன் வடக்கு – கிழக்கு தமிழர்களும் யுத்தம் வேண்டாம்; சமாதானமே தேவை என்று வலியுறுத்திஉள்ளனர். ஆகவே பேச்சுவார்த்தைமூலம் சமாதானத்தைக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-6)

மேஜர் வித்தியின் வித்துடல் விதைப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தரையிறக்கும் போர்க் கப்பல் மீது நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலில் கப்பலை பாரிய சேதத்துக்குள்ளாக்கி வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் வித்தியின்(சந்தனம் யோகேஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

தோல்வியை ஏற்றார் சிறிமா

கொழும்பு, நவ. 11

ஜனாதிபதித் தேர்தலில் தமது தோல்வியை ஐ.தே.க. வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா ஒப்புக்கொண்டார்

பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்வி திருமதி சிறிமா திஸாநாயக்காவுடன் தொடர்புகொண்டபோது தமது தோல்வியை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார்.

(உ-எ)

நேற்றைய உதயனிலும், நேற்றைய விசேட பதிப்பிலும் பிரசுரமான செய்திகள் சிலவும் இந்தப் பதிப்பிலும் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் மயிலணிதிருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாதசுவாமி கோவில்

யமசங்கார உற்சவ சிறப்புமலர்

(11-11-1994)

காலனை காலாலுதைத்த கருணை வள்ளல்

இலங்கைத்தீவின் வடபகுதியில் யாழ்.பிரதேசத்தின் மத்திய ஸ்தானமாக விளங்குவதும் ரஜதாசலம், வெள்ளியங்கிரி, ரஜதகிரி என வளங்கப் பெறுவதுமாகிய சுன்னாகத்தில் மயிலணி என்னும் பதியில் குடவாயிற் கோட்டத்தில் சர்வாபீஷ்ட வரதராகிய விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் வீற்றிருந்தருள் செய்கின்றார். இத்திருத்தலம் முன்னர் கப்பிரமணியப் பெருமான் சூரசம்ஹாரம் முடித்து வரும்பொழுது சிவபூசை செய்த தலமாகும். இராவணன் பூசித்து அருள் பெற்றதும் இத் தலத்திலேயாகும்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இத்தலத்தில் மார்க்கண்டேயருக்காக யமனை உதைத்த விழாவினைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று பல அன்பர்களும் கேட்டுக் கொண்டதற்கமைய இன்று இப்பெரு விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. மார்க்கண்டேயருடைய சரித்திரம் யாவரும் அறிந்ததே. ஆயினும் அதிலுள்ள சிறப்பம்சங்களைச் சிறிது சிந்திப்போம்.

மிருகண்டு முனிவர் சிவபெருமானிடம் வரம் பெற்ற பொழுதே அவர் பிள்ளைக்குக் கொடுக்கப் பெற்றது பதினாறு வயது மட்டுமே. அவரது மகள் மார்க்கண்டேயர் பதினாறு வயது அடைதலும் இப்பிள்ளையைப் பிரிய வேண்டியிருக்கிறதேயெனப் பெற்றோர் வருந்தினர். அதனைக்கண்ட மார்க்கண்டேயர் அவர்களைத் தேற்றிக் காசிக்குச் சென்று சிவனை நினைத்து சிவபூசை செய்து வழிபட்டார்.

அவருடைய வழிபாடுகண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவர் பூசித்த லிங்கத்திலின்றும் தோன்றி, யமனுக்கு அஞ்சவேண்டாம் என்றும் அவர் என்றும் பதினாறு வயதுடையவராக சிரஞ்சீவியாக வாழ்வார் என்றும் அருள் செய்தார்.

இந்நிலையில் அவரது உயிரைக் கவர்வதற்காக யமன் அங்கு வந்தான். அவன்மார்க்கண்டேயருடைய சிவபூசை நிலையையாவது அவரது சிவசின்னம் தரித்த கோலத்தையாவது மதித்தானில்லை. சிவசந்நிதியில் அவர் இருக்கிறார் என்பதையும் மதியாது ஆணவத்துடன் அவர் மீது பாசக்கயிற்றை வீசினான். அப்பொழுது இறைவன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து வெளிப்பட்டு யமனை உதைத்தருளினார். யமன் வீழ்ந்து மடிந்தான். மார்க்கண்டேயர் சிவபெருமான் திருவருள் பெற்று மரணமில்லாப் பெருவாழ்வுடையவராகித் தமது தாய், தந்தையரின் துன்பத்தை நீக்கினார்.

பின்னர் பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான் யமனை உயிர்ப்பித்தருளி அவனுக்குப் பின்வரும் புத்திமதிகளைக் கூறுவாராயினார். திருநீறு, உருத்திராக்கம் முதலியவற்றை அணிந்தவர்களையும் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்து நம்மை வழிபடுபவர்களையும் கண்டால் அவர்களை யாம் என நினைத்து வழிபடுவாயாக என்று கூறினார். அன்று முதல் சிவனடியார்

(5 ஆம் பக்கம் பார்க்க)

சிவஸ்ரீ சோ. சோமாஸ்கந்தக் குருக்கள்

[ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவும்]

யம பயம் நீங்க வழி

அந்த ணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வல்வினாய்க் குன்தன் வன்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியின்
இவன் மற் றென்னடி யான்என விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூர் உளானே.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்புன்கூர் திருத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி இருக்கும் சுவாமி மீது பாடி அருளியது ஏழாம் திருமுறையாகும்.

நமன்—எமன் வருத்தலால் உயிர்களுக்கு உண்டாகின்ற எமபயத்தை தேவாரத்தின் ஐந்தாவது வரி நமக்கு உணர்த்துகின்றது. அந்த யம பயத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்ளவும் மார்க்கம் உண்டு. அதை ஏழாவது வரிப் பொருள் நமக்கு உணர்த்துகிறது. அதற்குச்சான்று தேவாரத்தின் முதல் அடி. அதன் பெறுபேறு தேவாரத்தின் மூன்றாம் நான்காம் அடிகள்.

மேற்கூறியவற்றை தொகுத்துப் பார்க்கின்றபோது எமபயம் எவருக்கும் உண்டு. அதை பெற்றிகொள்ள கைகண்ட மருந்து சிவபிரானுடைய திருவடிகளை வழிபடுதல். சிவனடியாரிடத்தில் எமன் வரமாட்டான். மற்றது வருவானேல் சிவபெருமான் கால காலனாவார். யமன் தண்டிக்கப்படுவான். உயிரைக் கவரவந்தவன் உயிரை இழப்பான். அந்த உண்மையை உணர்த்திக் கொண்டிருப்பது, யமனை வென்ற மார்க்கண்டேயருடைய மேலான சிவபூசை.

இவ்வரிதான சிறப்புமிக்க நிகழ்ச்சியை சுன்னாகம் மயிலணிப் பதியில் குடவாயில் கோட்டத்தில் வீற்றிருக்கும் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் திருவருளால், இந்த ஆலயத்தின் சரித்திரத்திலே முதன்மை பெறக்கூடிய வகையில் யமசங்கார உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. இந்நன்னாளில் நாமும் காணும் பேறு பெற்று காலன் எம்மை அணுகாமல் சிவபெருமானுடைய மலர் அடிகளில்

5 ஆம் பக்கம் பார்க்க)

சிவலிங்கம் கஜமுகலிங்கம்

(பிரதிப்பொது முகாமையாளர், ஓ. நோர் நிறுவனம், யாழ். பிராந்தியம்.)

யமசங்கார விழா சிறப்புற வாழ்த்துவோர்

திசைகாட்டி (COMPASS)
தொழிற்றுறை சார்ந்த கல்வி வழிகாட்டி சேவை,
இல: 8 நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

சக்தி மருந்தகம்
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

திரு. சேது காவலர் விபுலானந்தா
செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம்.

திரு. S.M. பாலசுப்பிரமணியம் மல்லாகம்

தயா மரக்காலை
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

துரை வெதுப்பகம்
சூராவத்தை, சுன்னாகம்.

மணியம் ஸ்ரோர்ஸ்
சூராவத்தை, சுன்னாகம்.

ராஜா மெடிக்கல்ஸ்
K.K.S வீதி, சுன்னாகம்.

சுந்தரம் பல்பொருள் களஞ்சியம்,
K.K.S வீதி, சுன்னாகம்.

துர்க்கா பொத்தகசாலை
பேருந்து நிலைய முன்பாக, சுன்னாகம்.

சிவா பல்பொருள் களஞ்சியம்
K.K.S வீதி, சுன்னாகம்.

மேகலா பல்பொருள் வாணிபம்
K.K.S வீதி, சுன்னாகம்.

கண்ணீர் அஞ்சலி

அமரர்
வல்லிபுரம் பொன்னுச்சாமி

மண்ணிடை உதிப்பு: 22-09-1910
மண்ணிடை உதிர்ப்பு: 31-08-1994

31-8-94 அன்று அவுஸ்திரேலியா விக்ரோறியா (Victoria) வில் சிவபதமடைந்த யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த அமரர் வல்லிபுரம் பொன்னுச்சாமி அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

இவர் நேசம்மாவின் அன்புக் கணவரும், நாகேந்திரராசா (அவுஸ்திரேலியா), ராணிவேனர் (ஜேர்மனி), விஜயராணி (ஜேர்மனி)' விக்கினேஸ்வரராணி சத்தியகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாகிறற் குணமணி, மேரி மாசில்லா, நாகேந்திரராசா, வோல்ல்கங் வேனர், கைலைத்திலிங்கம் சத்தியகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், றீற்றா காயத்திரி, நாகேந்திரராசா, அன்ரனிகுமார் நாகேந்திரராசா, ஸரெபாலி சந்திரா நாகேந்திரராசா, யூற் கிறிஸ் அச்சுதன், நாகேந்திரராசா, ஜோன் ராஜவேனர், சந்திரா சப்றீனா வேனர், சாறா கத்றீன் வேனர், ஹறி ரமேஸ் குமார், சத்தியகுமார் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-9-94 அன்று 3/11, Rhoden Grover, 3177, Victoria வில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விக்ரோறியாவில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி

தகவல்:

திரு. நாகேந்திரராசா (அவுஸ்திரேலியா)
திருமதி ராணிவேனர் (ஜேர்மனி)
செல்வி விஜயராணி (ஜேர்மனி)
திருமதி விக்கி சத்தியகுமாரன் (ஜேர்மனி)

(33721)

22 மாவட்டங்களும் சந்திரிகாவுக்கே!

சந்திரிகாகுமாரணதுங்கா தாம் போட்டியிட்ட 22 மாவட்டங்களிலும் வெற்றி பெற்று இலங்கையின் தேர்தல் வரலாற்றில் பெரும் சாதனை ஒன்றை நிலைநாட்டி உள்ளார்.

இம்முறை முன்னைய தேர்தல்களைப் போன்று அல்லாது தோட்டப் பகுதிகள் அடங்கி உள்ள கண்டி, பதுளை, மாத்தளை, மொனராகல, நுவரெலியா மாவட்டங்களிலும் சந்திரிகாவுக்கே வெற்றிகிடைத்தது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் கடைசி நேரத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராக இணைந்து கொண்டது தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் சந்திரிகாவுக்கு கிடைக்க வழி வகுத்தது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாக்களிப்பு இடம் பெறவில்லை.

எனினும் இப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தோருக்காக வெளிமாவட்டங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த

எடிசன் வெளியீடுகள்

வெளிவந்துவிட்டன!

1. O/L கணிதம் பகுதி 1
கடந்த 18 வருட வினாக்களின் அலகு ரீதியான தொகுப்பு (515 வினாக்கள் - விடைகளுடன்)
2. O/L கணிதம் பகுதி 2
கடந்த 18 வருட வினாக்களின் அலகுரீதியான தொகுப்பு (200 வினாக்கள்)
3. O/L பரீட்சை வழிகாட்டி - 1
தொடை - நிகழ்தகவு (117 வினாக்கள் - விடைகளுடன்)

★ யாழ். நகரின் சகல புத்தகசாலையிலும் கிடைக்கும்.

தொகுப்பு:
திரு. B. P. பாஸ்கரன்
[சி-9656]

BIRTHDAY REMEMBRANCE

PRIMROSE PATHMADEVI SABAPATH PILLAI (RANEE)

Fondly Remembered On Her Birthday Today (11-1 -1994) By Her Beloved Sisters, Brothers, Sisters - In - Law, Nieces and Nephews. Primrose Cot, Chavakachcheri.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளில் கருத்தரங்கு

தென்மராட்சி, நவ. 11

சாவகச்சேரி மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் சாரணர் படை அங்குரார்ப்பண விழா இன்று வெள்ளி காலை 9.00 மணிக்கு அதிபர் ச. ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும். (இ-117)

சேவைக்கால பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 11

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு நான்கில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் நடைபெறுமென கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும் என்றும் பங்கு பற்றுபவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 11

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட நடமாடும் மீன் வியாபாரிகளுக்கான விசேட கலந்துரையாடல் கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

ஆட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 11

யாழ். மாவட்டப் பாடசாலை விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெற விருந்த ஆட்டங்கள் மட்டும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக பயிற்சிக்குப் பொறுப்பான உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

பயிற்சிப் பத்திரிகையாளர்

புதியனவற்றை அறிந்து அவற்றை மற்றவர்களுக்கும் உண்மை பிசகாது சொல்ல வேண்டும் என்பதில் நீங்கள் விருப்பம் உடையவரா?

பத்திரிகையாளராகத் தொழில் புரிய வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு உண்டா?

இவற்றோடு —

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியும் —

ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் தமிழில் அதிவிசேட சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருந்தால் — உங்கள் கல்விப் பின்னணி, குடும்பப் பின்னணி ஆகிய விவரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பத்தை அனுப்புங்கள்.

வயதெல்லை: 21 முதல் 24 வரை.
பயிற்சிக் காலம்: ஒரு வருடம்
விண்ணப்ப முடிவு திகதி:
12-11-1994

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

கந்தையா துரைராஜா ஆகிய எனது கைச்சங்கிலி (பின்னல் டிசைன்) 10-11-1994 அன்று காலை 6.30 மணியளவில் அச்சுவேலி சந்திக்கும் ஆவரங்கால் சந்திக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'அச்சுவேலிச்' சந்தியில் உள்ள கண்டி ஸ்ரோர்ஸ் இல் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(7805)

தசாக கிருஹயக்ஞ அழைப்பு

சிவஸ்ரீ. சிவ. நாகேஸ்வரக் குருக்கள்

பவ வருடம் ஐப்பசி மாதம் 17 ஆம் நாள் (1994—11—03) வியாழக்கிழமை சிவபதமடைந்த

சிவஸ்ரீ. சிவ. நாகேஸ்வரக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பலவும் நாட்களில் நடைபெறும்.

தசாகம்: 12-11-94 சனிக்கிழமை பகல் 10-30 மணி
கிருஹ பக்தம்: 15-11-94 செவ்வாய்க்கிழமை

மேற்படி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
சிவஸ்ரீ. மு. சிவகடாட்சக் குருக்கள் (தகப்பன்)

மயிலணி,
சுன்னாகம். (சி/5736)

தொகுதி அடிப்படையில் தேர்தல் முடிவுகள்

கொழும்பு மாவட்டம்

கொலன்னாவை

சந்திரிகா	40,296
சிறிமா	21,313
ரணசிங்க	201
ஹட்சன்	202
ஹரிச்சந்திர	330
கலப்பதி	156

[கோட்டே

சந்திரிகா	31,646
சிறிமா	16,331
ரணசிங்க	232
ஹட்சன்	118
ஹரிச்சந்திர	531
கலப்பதி	97

கொழும்பு-கிழக்கு

சந்திரிகா	23,867
சிறிமா	12,806
ரணசிங்க	182
ஹட்சன்	115
ஹரிச்சந்திர	373
கலப்பதி	72

பொரளை

சந்திரிகா	20,837
சிறிமா	13,162
ரணசிங்க	124
ஹட்சன்	96
ஹரிச்சந்திர	236
கலப்பதி	57

கொழும்பு-மத்தி

சந்திரிகா	56,219
சிறிமா	33,824
ரணசிங்க	291
ஹட்சன்	271
ஹரிச்சந்திர	245
கலப்பதி	149

கொழும்பு - வடக்கு

சந்திரிகா	26,250
சிறிமா	15,924
ரணசிங்க	103
ஹட்சன்	137
ஹரிச்சந்திர	118
கலப்பதி	75

தெகிவளை

சந்திரிகா	23,977
சிறிமா	12,783
ரணசிங்க	195
ஹட்சன்	111
ஹரிச்சந்திர	326
கலப்பதி	77

மஹரகம

சந்திரிகா	47,818
சிறிமா	19,514
ரணசிங்க	240
ஹட்சன்	158
ஹரிச்சந்திர	638
கலப்பதி	153

கெஸ்பாவ

சந்திரிகா	54,327
சிறிமா	22,130
ரணசிங்க	267
ஹட்சன்	210
ஹரிச்சந்திர	464
கலப்பதி	179

கடுவெல

சந்திரிகா	51,876
சிறிமா	23,475
ரணசிங்க	521
ஹட்சன்	242
ஹரிச்சந்திர	599
கலப்பதி	205

அவிசாவளை

சந்திரிகா	31,132
சிறிமா	23,126
ரணசிங்க	230
ஹட்சன்	290
ஹரிச்சந்திர	787
கலப்பதி	163

ஹோமாகம

சந்திரிகா	45,072
சிறிமா	22,369
ரணசிங்க	284
ஹட்சன்	447
ஹரிச்சந்திர	
கலப்பதி	171

மொறட்டுவ

சந்திரிகா	45,403
சிறிமா	24,493
ரணசிங்க	234
ஹட்சன்	127
ஹரிச்சந்திர	280
கலப்பதி	118

கொழும் பு-மேற்கு

சந்திரிகா	14,329
சிறிமா	8,545
ரணசிங்க	180
ஹட்சன்	68
ஹரிச்சந்திர	179
கலப்பதி	19

இரத்மலானை

சந்திரிகா	28,666
சிறிமா	12,275
ரணசிங்க	152
ஹட்சன்	283
ஹரிச்சந்திர	83
கலப்பதி	71

கண்டி மாவட்டம்

குண்டசாலை

சந்திரிகா	23,150
சிறிமா	18,243
ரணசிங்க	122
ஹட்சன்	285
ஹரிச்சந்திர	237
கலப்பதி	102

கலகெதர

சந்திரிகா	17,288
சிறிமா	14,862
ரணசிங்க	95
ஹட்சன்	201
ஹரிச்சந்திர	117
கலப்பதி	61

தெல்தெனிய

சந்திரிகா	14,309
சிறிமா	10,742
ரணசிங்க	90
ஹட்சன்	238
ஹரிச்சந்திர	92
கலப்பதி	85

ஹேவாஹெற்ற

சந்திரிகா	19,303
சிறிமா	18,076
ரணசிங்க	119
ஹட்சன்	318
ஹரிச்சந்திர	107
கலப்பதி	74

கம்பளை

சந்திரிகா	29,557
சிறிமா	19,692
ரணசிங்க	169
ஹட்சன்	350
ஹரிச்சந்திர	193
கலப்பதி	105

பாததும்பற

சந்திரிகா	23,082
சிறிமா	19,995
ரணசிங்க	167
ஹட்சன்	349
ஹரிச்சந்திர	175
கலப்பதி	109

கண்டி

சந்திரிகா	17,339
சிறிமா	10,477
ரணசிங்க	78
ஹட்சன்	98
ஹரிச்சந்திர	258
கலப்பதி	41

ஹரிஸ்பத்துவ

சந்திரிகா	48,134
சிறிமா	33,008
ரணசிங்க	228
ஹட்சன்	582
ஹரிச்சந்திர	303
கலப்பதி	219

செங்கடகல

சந்திரிகா	22,323
சிறிமா	17,151
ரணசிங்க	123
ஹட்சன்	172
ஹரிச்சந்திர	335
கலப்பதி	62

உடுநுவர

சந்திரிகா	24,194
சிறிமா	17,442
ரணசிங்க	155
ஹட்சன்	25
ஹரிச்சந்திர	215
கலப்பதி	101

உடதும்பற

சந்திரிகா	22,944
சிறிமா	11,906
ரணசிங்க	96
ஹட்சன்	277
ஹரிச்சந்திர	86
கலப் தி	126

பட்டிநுவர

சந்திரிகா	25,099
சிறிமா	17,621
ரணசிங்க	103
ஹட்சன்	226
ஹரிச்சந்திர	220
கலப்பதி	130

நாவலப்பிட்டி

சந்திரிகா	26,785
சிறிமா	19,423
ரணசிங்க	169
ஹட்சன்	344
ஹரிச்சந்திர	176
கலப்பதி	110

மாத்தறை மாவட்டம்

தெவிநுவர

சந்திரிகா	30,817
சிறிமா	14,824
ரணசிங்க	169
ஹட்சன்	185
ஹரிச்சந்திர	185
கலப்பதி	197

வெலிகம

சந்திரிகா	34,583
சிறிமா	16,708
ரணசிங்க	145
ஹட்சன்	201
ஹரிச்சந்திர	173
கலப்பதி	172

அக்குறஸ்ஸ

சந்திரிகா	32,632
சிறிமா	18,165
ரணசிங்க	145
ஹட்சன்	327
ஹரிச்சந்திர	175
கலப்பதி	211

மாத்தறை

சந்திரிகா	32,503
சிறிமா	15,751
ரணசிங்க	138
ஹட்சன்	152
ஹரிச்சந்திர	205
கலப்பதி	123

தெனியாய

சந்திரிகா	30,662
சிறிமா	18,819
ரணசிங்க	219
ஹட்சன்	465
ஹரிச்சந்திர	316
கலப்பதி	290

ஹக்மன

சந்திரிகா	29,759
சிறிமா	17,473
ரணசிங்க	163
ஹட்சன்	407
ஹரிச்சந்திர	240
கலப்பதி	207

கம்புறுப்பிட்டிய

சந்திரிகா	31,038
சிறிமா	14,133
ரணசிங்க	128
ஹட்சன்	305
ஹரிச்சந்திர	213
கலப்பதி	167

பதுளை மாவட்டம்

பதுளை

சந்திரிகா	17,416
சிறிமா	10,210
ரணசிங்க	104
ஹட்சன்	255
ஹரிச்சந்திர	182
கலப்பதி	76

ஊவாபறணகம

சந்திரிகா	20,307
சிறிமா	16,031
ரணசிங்க	139
ஹட்சன்	335
ஹரிச்சந்திர	134
கலப்பதி	141

மகியங்கனை

சந்திரிகா	18,217
சிறிமா	24,842
ரணசிங்க	213
ஹட்சன்	446
ஹரிச்சந்திர	213
கலப்பதி	203

ஹாலி-எல

சந்திரிகா	20,090
சிறிமா	14,430
ரணசிங்க	153
ஹட்சன்	491
ஹரிச்சந்திர	212
கலப்பதி	146

வியலுவ

சந்திரிகா	15,304
சிறிமா	11,227
ரணசிங்க	193
ஹட்சன்	456
ஹரிச்சந்திர	145
கலப்பதி	172

பசறை

சந்திரிகா	19,303
சிறிமா	13,793
ரணசிங்க	167
ஹட்சன்	556
ஹரிச்சந்திர	176
கலப்பதி	174

பண்டாரவளை

சந்திரிகா	23,648
சிறிமா	15,072
ரணசிங்க	152
ஹட்சன்	464
ஹரிச்சந்திர	236
கலப்பதி	161

வெலிமடை

சந்திரிகா	22,177
சிறிமா	17,280
ரணசிங்ச	126
ஹட்சன்	284
ஹரிச்சந்திர	164
கலப்பதி	121

அப்புத்தளை

சந்திரிகா	20,108
சிறிமா	13,371
ரணசிங்க	140
ஹட்சன்	551
ஹரிச்சந்திர	221
கலப்பதி	140

களுத்துறை மாவட்டம்

பாணந்துறை

சந்திரிகா	42,951
சிறிமா	20,032
ரணசிங்க	192
ஹட்சன்	168
ஹரிச்சந்திர	346
கலப்பதி	160

பேருவளை

சந்திரிகா	36,364
சிறிமா	23,487
ரணசிங்க	135
ஹட்சன்	246
ஹரிச்சந்திர	115
கலப்பதி	153

களுத்துறை

சந்திரிகா	37,490
சிறிமா	22,209
ரணசிங்க	170
ஹட்சன்	237
ஹரிச்சந்திர	226
கலப்பதி	161

ஹொறண

சந்திரிகா	36,064
சிறிமா	21,886
ரணசிங்க	212
ஹட்சன்	351
ஹரிச்சந்திர	262
கலப்பதி	147

பண்டாரகம

சந்திரிகா	40,503
சிறிமா	23,655
ரணசிங்க	187
ஹட்சன்	315
ஹரிச்சந்திர	263
கலப்பதி	177

அகலவத்தை

சந்திரிகா	32,467
சிறிமா	21,903
ரணசிங்க	163
ஹட்சன்	322
ஹரிச்சந்திர	190
கலப்பதி	251

புளத்சிங்கள

சந்திரிகா	27,072
சிறிமா	20,0ஒ4
ரணசிங்க	131
ஹட்சன்	281
ஹரிச்சந்திர	172
கலப்பதி	145

மத்துகம

சந்திரிகா	33,726
சிறிமா	20,667
ரணசிங்க	167
ஹட்சன்	286
ஹரிச்சந்திர	202
கலப்பதி	201

மாத்தளை மாவட்டம்

மாத்தளை

சந்திரிகா	47,611
சிறிமா	22,864
ரணசிங்க	200
ஹட்சன்	208
ஹரிச்சந்திர	259
கலப்பதி	194

லக்கல

சந்திரிகா	26,092
சிறிமா	13,013
ரணசிங்க	119
ஹட்சன்	507
ஹரிச்சந்திர	137
கலப்பதி	143

ரத்தோட்ட

சந்திரிகா	28,300
சிறிமா	18,187
ரணசிங்க	169
ஹட்சன்	618
ஹரிச்சந்திர	250
கலப்ட தி	154

தம்புள்ள

சந்திரிகா	30,879
சிறிமா	23,776
ரணசிங்க	187
ஹட்சன்	602
ஹரிச்சந்திர	273
கலப்பதி	229

மொனறாகலை மாவட்டம்

பிபிலை

சந்திரிகா	24,271
சிறிமா	13,867
ரணசிங்க	200
ஹட்சன்	674
ஹரிச்சந்திர	209
கலப்பதி	246

வெல்லவாயா

சந்திரிகா	37,050
சிறிமா	21,090
ரணசிங்க	174
ஹட்சன்	600
ஹரிச்சந்திர	414
கலப்பதி	295

மொனறாகலை

சந்திரிகா	31,950
சிறிமா	15,801
ரணசிங்க	175
ஹட்சன்	687
ஹரிச்சந்திர	234
கலப்பதி	261

இரத்தினபுரி மாவட்டம்

கலவான

சந்திரிகா	19,993
சிறிமா	14,434
ரணசிங்க	87
ஹட்சன்	234
ஹரிச்சந்திர	93
கலப்பதி	82

இரத்தினபுரி

சந்திரிகா	38,221
சிறிமா	25,858
ரணசிங்க	162
ஹட்சன்	435
ஹரிச்சந்திர	225
கலப்பதி	142

கொலன்ன

சந்திரிகா	44,641
சிறிமா	22,425
ரணசிங்க	222
ஹட்சன்	666
ஹரிச்சந்திர	465
கலப்பதி	312

பெல்மதுளை

சந்திரிகா	24,076
சிறிமா	19,994
ரணசிங்க	138
ஹட்சன்	405
ஹரிச்சந்திர	172
கலப்பதி	118

பலாங்கொடை

சந்திரிகா	32,502
சிறிமா	23,943
ரணசிங்க	154
ஹட்சன்	353
ஹரிச்சந்திர	257
கலப்பதி	195

இறக்குவானை

சந்திரிகா	27,997
சிறிமா	25,338
ரணசிங்க	189
ஹட்சன்	453
ஹரிச்சந்திர	253
கலப்பதி	154

எகலியகொடை

சந்திரிகா	32,647
சிறிமா	20,589
ரணசிங்க	125
ஹட்சன்	366
ஹரிச்சந்திர	166
கலப்பதி	100

நிவித்திகல

சந்திரிகா	31,980
சிறிமா	22,172
ரணசிங்க	145
ஹட்சன்	532
ஹரிச்சந்திர	202
கலப்பதி	152

திகாமடுல்ல மாவட்டம்

கல்முனை

சந்திரிகா	31,511
சிறிமா	4,092
ரணசிங்க	70
ஹட்சன்	701
ஹரிச்சந்திர	57
கலப்பதி	77

அம்பாறை

சந்திரிகா	44,403
சிறிமா	34,832
ரணசிங்க	232
ஹட்சன்	640
ஹரிச்சந்திர	236
கலப்பதி	247

பொத்துவில்

சந்திரிகா	56,780
சிறிமா	11,774
ரணசிங்க	88
ஹட்சன்	1,401
ஹரிச்சந்திர	114
கலப்பதி	147

சம்மாந்துறை

சந்திரிகா	30,890
சிறிமா	6,056
ரணசிங்க	89
ஹட்சன்	918
ஹரிச்சந்திர	50
கலப்பதி	79

அனுராதபுரம் மாவட்டம்

மிகிந்தலை

சந்திரிகா	19,935
சிறிமா	10,541
ரணசிங்க	66
ஹட்சன்	267
ஹரிச்சந்திர	86
கலப்பதி	97

கலாவெவ

சந்திரிகா	42,661
சிறிமா	17,331
ரணசிங்க	112
ஹட்சன்	
ஹரிச்சந்திர	191
கலப்பதி	257

அனுராதபுரம்-மேற்கு

சந்திரிகா	21,141
சிறிமா	18,892
ரணசிங்க	113
ஹட்சன்	165
ஹரிச்சந்திர	142
கலப்பதி	141

கெக்கிராவ

சந்திரிகா	23,583
சிறிமா	14,514
ரணசிங்க	75
ஹட்சன்	324
ஹரிச்சந்திர	110
கலப்பதி	95

அனுராதபுரம்-கிழக்கு

ச திரிகா	27,421
சிறிமா	15,490
ரணசிங்க	102
ஹட்சன்	310
ஹரிச்சந்திர	220
கலப்பதி	134

ஹொறவபொத்தான

சந்திரிகா	26,000
சிறிமா	13,267
ரணசிங்க	86
ஹட்சன்	298
ஹரிச்சந்திர	80
கலப்பதி	136

மதவாச்சி

சந்திரிகா	25,937
சிறிமா	13,185
ரணசிங்க	106
ஹட்சன்	401
ஹரிச்சந்திர	129
கலப்பதி	182

கேகாலை மாவட்டம்

ருவான்வெல

சந்திரிகா	23,340
சிறிமா	18,088
ரணசிங்க	131
ஹட்சன்	298
ஹரிச்சந்திர	137
கலப்பதி	119

தெரணியகலை

சந்திரிகா	18,793
சிறிமா	18,179
ரணசிங்க	128
ஹட்சன்	375
ஹரிச்சந்திர	131
கலப்பதி	94

எட்டியாந்தோட்டை

சந்திரிகா	21,930
சிறிமா	18,200
ரணசிங்க	123
ஹட்சன்	409
ஹரிச்சந்திர	180
கலப்பதி	110

டெடிகம

சந்திரிகா	28,979
சிறிமா	22,989
ரணசிங்க	133
ஹட்சன்	329
ஹரிச்சந்திர	159
கலப்பதி	134

மாவனல்ல

சந்திரிகா	25,400
சிறிமா	19,367
ரணசிங்க	143
ஹட்சன்	350
ஹரிச்சந்திர	209
கலப்பதி	101

அரனாயக்க

சந்திரிகா	17,156
சிறிமா	13,854
ரணசிங்க	78
ஹட்சன்	224
ஹரிச்சந்திர	113
கலப்பதி	107

கேகாலை

சந்திரிகா	24,126
சிறிமா	14,150
ரணசிங்க	87
ஹட்சன்	197
ஹரிச்சந்திர	140
கலப்பதி	115

கலிகமுவ

சந்திரிகா	22,972
சிறிமா	16,086
ரணசிங்க	98
ஹட்சன்	307
ஹரிச்சந்திர	132
கலப்பதி	104

காலி மாவட்டம்

பலப்பிட்டிய

சந்திரிகா	17,307
சிறிமா	12,087
ரணசிங்க	83
ஹட்சன்	108
ஹரிச்சந்திர	59
கலப்பதி	70

ரத்கம

சந்திரிகா	28,618
சிறிமா	17,406
ரணசிங்க	81
ஹட்சன்	164
ஹரிச்சந்திர	138
கலப்பதி	156

அம்பலாங்கொடை

சந்திரிகா	25,258
சிறிமா	13,735
ரணசிங்க	101
ஹட்சன்	163
ஹரிச்சந்திர	140
கலப்பதி	116

பெந்தர-எல்பிட்டிய

சந்திரிகா	32,213
சிறிமா	18,747
ரணசிங்க	124
ஹட்சன்	224
ஹரிச்சந்திர	160
கலப்பதி	132

அக்மீமன

சந்திரிகா	29,135
சிறிமா	17,697
ரணசிங்க	117
ஹட்சன்	111
ஹரிச்சந்திர	190
கலப்பதி	128

கரந்தெனிய

சந்திரிகா	22,470
சிறிமா	11,904
ரணசிங்க	81
ஹட்சன்	244
ஹரிச்சந்திர	126
கலப்பதி	163

ஹினிதும

சந்திரிகா	34,003
சிறிமா	23,216
ரணசிங்க	172
ஹட்சன்	282
ஹரிச்சந்திர	157
கலப்பதி	208

காலி

சந்திரிகா	23,587
சிறிமா	17,257
ரணசிங்க	127
ஹட்சன்	83
ஹரிச்சந்திர	185
கலப்பதி	98

பத்தேகம

சந்திரிகா	33,932
சிறிமா	20,785
ரணசிங்க	131
ஹட்சன்	272
ஹரிச்சந்திர	174
கலப்பதி	185

அம்பாந்தோடை மாவட்டம்

முல்கிரிய

சந்திரிகா	26,535
சிறிமா	17,983
ரணசிங்க	194
ஹட்சன்	419
ஹரிச்சந்திர	409
கலப்பதி	389

தங்காலை

சந்திரிகா	33,442
சிறிமா	18,680
ரணசிங்க	170
ஹட்சன்	319
ஹரிச்சந்திர	332
கலப்பதி	462

தெஹியத்தை

சந்திரிகா	26,335
சிறிமா	16,150
ரணசிங்க	165
ஹட்சன்	273
ஹரிச்சந்திர	294
கலப்பதி	285

திஸ்ஸமாறாம

சந்திரிகா	42,523
சிறிமா	23,102
ரணசிங்க	197
ஹட்சன்	390
ஹரிச்சந்திர	417
கலப்பதி	478

நுவரெலியா மாவட்டம்

கொத்மலை

சந்திரிகா	22,034
சிறிமா	19,707
ரணசிங்க	140
ஹட்சன்	555
ஹரிச்சந்திர	137
கலப்பதி	142

நுவரெலிய-மஸ்கெலிய

சந்திரிகா	94,262
சிறிமா	53,949
ரணசிங்க	590
ஹட்சன்	4,897
ஹரிச்சந்திர	757
கலப்பதி	618

ஹங்குரான்ஹெற்ற

சந்திரிகா	22,918
சிறிமா	19,609
ரணசிங்க	153
ஹட்சன்	350
ஹரிச்சந்திர	162
கலப்பதி	99

வலப்பன

சந்திரிகா	26,020
சிறிமா	20,955
ரணசிங்க	190
ஹட்சன்	509
ஹரிச்சந்திர	226
கலப்பதி	178

பொலனறுவை மாவட்டம்

மெதிரிகிரிய

சந்திரிகா	23,977
சிறிமா	17,587
ரணசிங்க	67
ஹட்சன்	313
ஹரிச்சந்திர	112
கலப்பதி	111

பொலன்னறுவை

சந்திரிகா	36,865
சிறிமா	25,284
ரணசிங்க	118
ஹட்சன்	527
ஹரிச்சந்திர	169
கலப்பதி	173

புத்தளம் மாவட்டம்

ஆனமடுவ

சந்திரிகா	35,978
சிறிமா	17,821
ரணசிங்க	122
ஹட்சன்	475
ஹரிச்சந்திர	176
கலப்பதி	191

வென்னப்புவ

சந்திரிகா	33,874
சிறிமா	21,004
ரணசிங்க	121
ஹட்சன்	228
ஹரிச்சந்திர	134
கலப்பதி	102

புத்தளம்

சந்திரிகா	29,040
சிறிமா	15,642
ரணசிங்க	122
ஹட்சன்	532
ஹரிச்சந்திர	75
கலப்பதி	118

நாத்தாண்டிய

சந்திரிகா	27,856
சிறிமா	16,721
ரணசிங்க	86
ஹட்சன்	180
ஹரிச்சந்திர	81
கலப்பதி	70

சிலாபம்

சந்திரிகா	35,415
சிறிமா	22,240
ரணசிங்க	121
ஹட்சன்	382
ஹரிச்சந்திர	133
கலப்பதி	130

கம்பஹா மாவட்டம்

திவுலப்பிட்டிய

சந்திரிகா	35,220
சிறிமா	23,749
ரணசிங்க	149
ஹட்சன்	235
ஹரிச்சந்திர	169
கலப்பதி	115

கந்தானை

சந்திரிகா	42,916
சிறிமா	24,637
ரணசிங்க	187
ஹட்சன்	251
ஹரிச்சந்திர	184
கலப்பதி	128

தொம்பே

சந்திரிகா	39,152
சிறிமா	19,920
ரணசிங்க	152
ஹட்சன்	283
ஹரிச்சந்திர	228
கலப்பதி	116

பியகம

சந்திரிகா	36,459
சிறிமா	19,619
ரணசிங்க	235
ஹட்சன்	201
ஹரிச்சந்திர	340
கலப்பதி	227

களனி

சந்திரிகா	35'602
சிறிமா	18,823

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
www.noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்லினச் செவ்விளநீர் தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு. கனகசுந்தரம், டச்லிரி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (8009)

கணிதம்

ஆண்டு இறுதிப் பரீட்சை பயிற்சி வினாத்தாள்கள் அடங்கிய ஆண்டு 6, 7, 9ற்கான கணித நூல். உதயன் வெளியீடு. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (சொற்ப பிரதிகளே உள்ளன) (33372)

றோனியோ, தட்டச்சு

மிகத் தெளிவான எழுத்துப் பிழைகளற்ற தத்ரூபமான படங்களுடன் (தமிழ், ஆங்கிலம்) Stencil கட்டண றோனியோ வேலைகளை குறித்த தவணையில் செய்து தர Bond புத்தக நிறுவனம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (7989)

தவறிவிட்டது

இக்னேசியஸ் விவேகானந்தன்ஆகிய எனது722352769V இலக்க அடையாள அட்டை 27-10-94இல் செட்டித்தெருகுறுக்கு ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 545, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (33680)

இன்று வியாழ மாற்றம்

இன்று 11-11-94 வியாழன் திருக்கணிதப்படி மாற்றமடைகிறது. (எல்லா ராசிகளின் பலன்கள்) ரூபா 10/- எங்கும் விற்பனையாகின்றது. குவசிரேடர்ஸ், கல்வியங்காடுச் சந்தி, நாராலாசிரியர்: சத்யா கட்டுடை. (33715)

மணமகன் தேவை

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது உத்தரட்டாதி நட்சத்திரம் ஜேர்மன் விசாவுடன் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளவர். தயவு செய்து முழுவிபரத்துடன் கடிதமூலம் நம்பர்40, மேற்பார்த்து உதயன் சேவை நிலையம், சுன்னாகம். தொடர்பு கொள்ளவும். (7804)

வினாத்தாள்

ஆண்டு - 3 தொடக்கம் ஆண்டு-8 வரையுள்ள வகுப்புகளுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை சகல வினாத்தாள்களையும் ஆண்டு - 3, 4, 5 மாணவர்களுக்கேற்ற கட்டுரைகள் (தமிழ், ஆங்கிலம்) பயிற்சி நூலையும் பெற்றுக் கொள்ளலாம். விசேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33693)

காணி சீர்திருத்த ஆணைக்குழு மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம், நவ.11

கடந்த இரண்டு வருடங்களுக்கு பின்னர் முதல் தடவையாக யாழ். செயலகத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் இயங்கவிருக்கிறது.

இந்த அலுவலகத்தில் பணியாற்றிய பணிப்பாளர் திரு. பரமலிங்கம் இடமாற்றம் பெற்று வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு சென்றதையடுத்து இந்த அலுவலகம் மூடப்பட்டிருந்தது.

இந்த ஆணைக் குழுவின் பணிப்பாளராக யாழ். மாவட்ட உதவிக் காணி ஆணையாளர் திரு. கே. எம். கைலாயநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

இந்த அலுவலகம் நாளை முதல் இயங்கும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

அறிவுக் களஞ்சியம்

27

29-11-94இல் வெளிவரும்.

(சி-9619)

முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்குமான

விசேட கலந்துரையாடல்

இடம்: யாழ். புதிய விஞ்ஞான கல்வி நிலையம்

காலம்: 11-11-94 (வெள்ளி) பி. ப. 3-4மணி

யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கலந்துரையாடவுள்ளார்.

குறிப்பு:

அன்றையதினம் யாழ். மாவட்டம் முழுவதும் மாலை நேரம் விடுமுறையாகும்.

அன்று கலந்து கொள்ளாதவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால் தவறாதுகலந்து வீணான சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

த. க. நிறுவன ஒன்றியம்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(சி/9652)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 29 — 06 — 1926

உதிர்வு: 11 — 11 — 1993

அமரர்
யோசேப்பு மாணிக்கம் சிவலிங்கம்

"கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்"

துன்பமில்லா தூய ஸ்தலம்
தூயவர் இயேசுவின் பரலோகம்
என கவலன் இளைப்பாறும்,
இன்ப ஸ்தலம் அதுதானே!

அன்னாரின் ஞாபகார்த்த ஸ்தோத்திர ஜெபம் இருபாலை காபான் ஜெப ஆலயத்தில் ஞாயிறு (13-11-94) காலை 9 மணிக்கு ஏறெடுக்கப்படும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகம் தந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

—மனைவி.

இருபாலைச் சந்தி,
கோப்பாய். (33693)

இன்றைய போராட்ட வரலாற்றை பதிவு செய்வதுமிகவும் அவசியமானது

நூல் வெளியீட்டு விழாவில் உரை

"இன்று நடைபெறும் போராட்ட வரலாறுகள் பதிவு செய்யப்பட வேண்டும்."

திரு. செல்லையா மெற்றாஸ்மயிலின் 'ஆனையை அடக்கிய அரியாத்தை' நூல் வெளியீட்டு விழாவில் பேசிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை மேலும் பேசும் போது கூறியதாவது:

அரியாத்தையின் இந்த வீர வரலாறு போல் எமது மண்ணில் இன்றும் பெண்கள் வீர வரலாறுகளைப் படைத்து வருகிறார்கள். நூலாசிரியர் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் எமது பண்டைய கலைச் சிறப்புக்களை பேண எடுத்து வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியது என்றார்.

திரு. சபாரத்தினம் தமது தலைமை உரையில் கூறியதாவது.

வன்னிப்பகுதியின் வீரம் செறிந்த வாழ்வு முறைகளை விளக்கும் வரலாற்று நூலாக வெளிவந்துள்ளன. இந்த நூல் எமது பெண்களின் ஒட்டு மொத்தமான வீரத்தையும் சித்திரிக்கும் வகையில் அமைந்துள்ளது. விடுதலைக்காகப் போராடும் எமது மண்ணில் காலத்தின் தேவையாக இது வெளிவந்துள்ளது.

எழுத்தாளர் திரு. க. சொக்கலிங்கம் பேசும் போது கூறியதாவது:

அரி என்பதற்கு புலி என்றும் ஒரு பொருள் உண்டு. இன்று நடக்கும் போரில் ஆனையை அடக்கிய புலி யாத்தைகளாக எமது பெண்கள் விளங்குகிறார்கள். அந்த உண்மையைச் சித்திரித்துக் காட்டும் வகையில் நேரடியாக மக்கள் உள்ளங்களில் இணைந்து கொள்ளக் கூடியதான நாட்டார் பாடல்களின் வடிவில் ஒரு காலத்தில் நிகழ்ந்த உண்மைச் சம்பவத்தை கூறும் நூலாக இது அமைந்துள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, திருமதி மனோன்மணி சண்முகதாஸ், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம், முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், நல்லை ஆதீன முதல்வர், செஃல்வி கலாநிதி சண்முக தாதபிள்ளை உட்பட பலர் பேசினார்கள்.

நூலின் முதல் பிரதியை நூலாசிரியர் திரு. மெற்றாஸ் மயிலிடம் இருந்து திரு. சிற்சபேசன் பெற்றுக்கொண்டார்.

கலைஞர்கள் கௌரவிப்பு, பரதநாட்டியம், கூத்திசைப் பாட்டு, மரபு நாடக இசைப் பாட்டு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. பொ. மாணிக்கமணி, யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. கு. சிறில் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். (1)

நன்றி நவில்கின்றேன்

அன்பான தந்தையே! உமது கருணையினாலும் இரக்கத்தினாலும் எனக்கு நீண்ட நாட்களாக குணமாகாதிருந்த முழங்கால் நோயை குணமாக்கியமைக்கு நன்றி கூறுவதுடன், என்றும் உமது இரக்கப் பெருக்கத்தில் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

—இறைஅடியான்

(33711)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

A/L 95 DAY CLASS

(94இல் பரீட்சை எடுத்த மாணவருக்குரியது)

கணக்கியல் — S. K. பிரபாகரன்
அளவையியல் — A. பிரபா
நடைபெறுகின்றன

சனி, ஞாயிறு

பொருளியல் — M. லோகசிங்கம்.
வர்த்தகம் — T. வரதன்

ஆரம்பம்: 12-11-94 சனி 10 மணி

★ மாணவர் நலன்கருதி பாடங்களுக்குத் தொடர்ச்சியான நேர அட்டவணை வழங்கப்படும்.

★ கணக்கியல் வாரத்தில் ஆறு மணித்தியாலங்களுக்கு நடைபெறும்.

(சி-9615)

கலைஞர்கள் கௌரவிப்பு, பரதநாட்டியம், கூத்திசைப் பாட்டு, மரபு நாடக இசைப் பாட்டு நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. பொ. மாணிக்கமணி, யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. கு. சிறில் ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். (1)

வியாழ மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 11

திருக்கணித பஞ்சாங்கப்படி இன்று நண்பகல் 12-12 மணிக்கு வியாழ பகவான் துலாராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு மாற்றமடைந்து ஒரு வருடம் வரை விருச்சிகத்தில் சஞ்சரிப்பார். (உ)

சமய தீட்சை

கொழும்புத்துறை, நவ 11

இணுவில் ஸ்ரீசுந்தரகவாமி கோயில் இளந்தொண்டர் சபையின் சைவப்பணிமனையில் இன்று காலை 8 மணிக்கு இலவசமாக சமய தீட்சை நடைபெறவுள்ளது. (உ-30)

ஓராண்டு நிறைவு தினம்

தென்மராட்சி, நவ. 11

பூநகரி— நாகதேவன்துறை கூட்டுப்படை முகாமைத் தகர்த்த தவளை நடவடிக்கையின் ஓராண்டு நிறைவு தினம் இன்றாகும்.

முன்னாள் எம்.பி பிணையில் விடுதலை

கொழும்பு, நவ. 11

வெலிகமவில் வைத்து கைது செய்யப்பட்ட முன்னாள் மாத்தறை மாவட்ட எம். பி திரு. மதுரபானதிரி வீர கடந்த திங்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் செல்ல மாத்தறை மாவட்ட நீதிவான் அவருக்கு அனுமதி அளித்தார்.

சட்டவிரோதமான கூட்டம் ஒன்றில் ஆயுதசகிதம் கலந்து கொண்டதற்காகவும் கொலைப் பயமுறுத்தல் விடுத்தமைக்காகவும் மதுர பால எதிரிவீர பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். (இ-4)

கோழிகளுக்கு தடுப்பூசி

வட்டுக்கோட்டை, நவ. 11

வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலையில் தினமும் ஆடு, மாடுகளை சினைப் படுத்தும் சேவையும், பிரதி சனிக்கிழமைகள் தோறும் கோழிகளுக்கு கொள்ளை நோய்த் தடுப்பூசியும் போடப் படுகின்றது. (சு-161)

நாய் பிடிப்பு மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.11

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

நாய்களைப் புதைப்பதற்கு இடவசதி இல்லாததினால் நாய் பிடிக்கும் வேலையை முன்னர் சுகாதார பிரிவினர் இடைநிறுத்தியது தெரிந்ததே. (சு-17)

பிற்போடப்பட்டுள்ளது

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் வர்த்தக மாணவர் மன்றத்தால் 10 - 11 - 94 அன்று நடைபெறவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30 - 11 - 94 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

33717) — வணிக மாணவர் மன்றம்.

கண்ணீர் மழையில்

ஓராண்டு — 6 ஆம் மாதம்



யோகராசா சுரேஸ்குமார்
(லெப். மெய்யப்பன்)

மறைவு: 11 — 11 — 1993

யோகராசா புவனேஸ்வரி

மறைவு: 11 — 05 — 1994

உங்களை இழந்த வேதனையில்
யார் சொல்லியும் ஆறாது;
யாருக்கும் சொல்லித் தீராது.

உங்கள் நினைவில்:
பெரியப்பா, பெரியம்மா, மாமாமார்,
சித்தி, அத்தைமார், சகோதரர்கள்.

"முருகநிழல்",
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(8007)

மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

ஆண்டு 3, 4, 6, 7, 9, 10
(மூன்றாம் தவணை)

ஆண்டு 5 (முதலிலை தேர்வு)

ஆண்டு 8 (இடை நிலைத் தேர்வு)

G.C.E. OL டிசம்பர் 94

பரீட்சைகளுக்கான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் யாழ். BOND நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

கிடைக்குமிடங்கள்:

யாழ்ப்பாணம்	— BOND	புத்தக நிறுவனம்
	— பூபாலசிங்கம்	.. ..
	— மக்மிலன்	.. ..
	— மண்டேலா	.. ..
	— ஸ்ரீவாலாம்பிகா	.. ..
கல்லாகம்	— துர்க்கா	.. ..
நெல்லியடி	— சிதம்பரப்பிள்ளை	.. ..
பருத்தித்துறை	— கமலா	.. ..
சாவகச்சேரி	— ஆசீர்வாதம்	.. ..
கொடிகாமம்	— அருள்நாயகி	.. ..
பளை	— செல்லையா	.. ..

ஆகிய புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

(8010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

பருவத்தே பயிர் செய்க

இலங்கையின் நான்காவது ஜனாதிபதியாக, திருமதி சந்திரிகா குமாரதுங்கா மிகமிக அமோக வெற்றிபெற்றுள்ளார். நாட்டின் தேர்தல்—அரசியல்— வரலாற்றில் இல்லாதவாறு, வாக்களித்த மக்களில் 62சத வீதமானோரின் ஆதரவைப் பெற்று வெற்றிவாகை சூடியுள்ளார். எந்தத் தேர்தலிலும் இல்லாதவாறு கூடுதலாக இருபது லட்சம் மேலதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று சந்திரிகா பெரும் சாதனையும் படைத்திருக்கிறார். இப்படி ஒரு சாதனையை நிலை நாட்ட முடியும் என்று சந்திரிகாவே கணக்குப் போட்டிருப்பாரோ என்று நினைக்கும் அளவுக்கான வியத்தகு வெற்றியை அவர் ஈட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இனவாத — சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான— கீழ்த்தரமான பிரசாரத்தின் மத்தியில் சந்திரிகாவுக்கு இத்தகைய பெருவெற்றி கிடைத்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க பதிவாகும். காமினி திஸாநாயக்காவின் கொலையோடு, அரசு - விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை தொடர்புபடுத்தி (அனுராப அலையை உண்டாக்கி) அதனை முறியடிப்பதற்கு— குழப்புவதற்கு— ஐ.தே.கட்சி எடுத்த "அரசியல் அநாகரீக" முயற்சிகளுக்கு மத்தியில் சந்திரிகா படைத்திருக்கும் சாதனை, நாட்டை புதிய அரசியல் பரிமாணத்துக்கு இட்டுச் செல்லும்.

மொத்தத்தில் சந்திரிகாவின் வெற்றி, அவர் படைத்த சாதனை, அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் வழங்கிய மிகமிகத் தெளிவான ஆணையாகும். திருமதி சந்திரிகா தமது தேர்தல் பிரசாரத் தொனிக்காட்சி உரைகளில் இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை உண்டாக்கவும், நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவும் ஆணை தருமாறு மிக வெளிப்படையாக — விளக்கமாக — கேட்டிருந்தார். அவர் கேட்ட ஆணையை மக்கள் மனமுவந்து கொடுத்திருக்கிறார்கள். அதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தலையடி கொடுத்து கீழே விழுத்திப் புரட்டியிருக்கிறார்கள் மக்கள். இனவாதத்துக்கும் சாவுமணி அடித்து விட்டார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சந்திரிகா தொடங்கிய செயற்பாட்டை மக்கள் அங்கீகரித்துவிட்டார்கள். எனவே விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்த சமாதானப் பேச்சுக்களை உடனடியாக மீண்டும் தொடங்க வேண்டும். இராணுவத்திடம் ஆலோசனை கேட்க வேண்டும்; அவர்களைச் சமாளிக்க வேண்டும் என்ற தங்கு தடைகள் எதுவும் இருக்கக்கூடாது.

சமாதானத்தை அடைவது — இனப்பிரச்சினையைத் தீர்ப்பது — என்று முன்வைத்த காலை பின் வைக்க இனி எந்தத் தடையும் இருக்கமுடியாது. ஒரு சனநாயக நாட்டில் மக்கள் தீர்ப்பே தேவவாக்கு. அதனை மேலோங்க எந்தச் சக்திக்கும், எந்தச் சிந்தனைக்கும் இடமளிக்கக்கூடாது.

ஒற்றையாட்சி முறையின் கீழ் தமிழர்களின் தன்னாட்சி அபிலாசைகளை சிறிதளவேனும் நிறைவேற்ற முடியாது என்ற உண்மை உணரப்படவேண்டும். இத்தனை காலத்தில் ஏற்பட்ட இழப்புகள், வாழ்க்கைச் சீரழிவுகளின் பின்னர் அதிகாரப்பரவல் அலகு ஒன்றை தமிழர்கள் ஏற்பார்கள் என்று கற்பனை செய்யக் கூடாது

நிறைவேறாது ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்காக, அரசமைப்பை மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதனை உரிய சந்தர்ப்பமாக்கி, மக்கள் கொடுத்த ஆணையைப் பலமாக்கி, தமிழர்களின் உரிமைகளை — நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை — கோரிக்கைகளை — நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும். அப்போது தான் சந்தர்ப்பம் பெற்ற பெருவெற்றி பெரும் விளைச்சலை தரும். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உகந்த பருவம் வந்திருக்கிறது. இந்தப் பருவத்திலேயே பயிர் செய்துவிட வேண்டும்.

புலிகளின் குரல் வானொலியில்

11 — 11 — 1994
வெள்ளி இரவு

★ 8-01 — "ஒப்பரேஷன் தவளைத்" தாக்குதலின் முதலாம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — நாலண்ணன் எழுதிய "எங்கள் கடலில் எங்கள் படகில்"
★ 8-25 — கணப் பொழுது — ரி. கண்ணம்மா எழுதிய "கப்டன் முரளி"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்
8-50 — வாத்திய கானங்கள்
★ — 9-00 இரவு நிகழ்ச்சி நிறைவு

12— 11 — 1994
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — நீங்கள் கேட்டவை
★ 8-00 — காலை நிகழ்ச்சிகள் நிறைவு

அமைச்சர் பௌஸியின் கணிப்பு சரியானது!

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா இருபது லட்சம் அதிகப்படியான வாக்குகளினால் வெல்வார் என்ற தமது கணிப்பை சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி தேர்தலன்று — வாக்களிப்பு வேளையில் — வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வடகொழும்பில் வாக்களிப்பு நிலையம் ஒன்றில் வாக்களிக்கச் சென்ற அவர் அதன் பின்னர் பி.பி.சி செய்தியாளருக்கு பேட்டி யளிக்கையில் இத்தகவலை வெளியிட்டிருந்தார்.

தேர்தலிலோ — வாக்களிப்பிலோ — ஐ.தே. கவினர் ஆர்வம் காட்டவில்லை என்று அவர் அப்போது குறிப்பிட்டார்.

பெண்களின் தலைமைத்துவத்தின் கீழ் முஸ்லிம்கள் ஒருபோதும் அணி திரளமாட்டார்கள் என ஒக்டோபர் 23 ஆம் திகதிக்கு முன்னர் கூறிவந்த முன்னாள் சபாநாயகர் எம். எச். முஹம்மது—

இப்போது தமது சட்டிக்காக—ஒரு பெண் வேட்பாளரின் கீழ் அணி திரளுமாறு— அழைப்பு விடுக்கிறார், இது அவர் இப்போது மதம் மாறிவிட்டாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது— இப்படி பௌஸி மேலும் குறிப்பிட்டார். (உ—6)

ஷெல்லினால் காயம்

வெற்றிலைக்கேணி இராணுவமுகாமில் இருந்து நேற்று முன்தினம். காலை மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலின் போது காயமடைந்தவர்களில் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

உடுத்துறையில் இடம் பெற்ற இந்த ஷெல்தாக்குதல் சம்பவத்தில் ஷெல்லுக்கு பயந்து பாதுகாப்புத் தேடி ஒடிப் பதுங்கிக்கொண்டிருந்தவர்களே அருகில் விழுந்து வெடித்த ஷெல்லினால் படுகாயமடைந்தனர்.

உடுத்துறையைச் சேர்ந்த கந்தையா தனபாலசிங்கம் (வயது 42), பாலசிங்கம் சரோஜாதேவி (வயது 29) ஆகிய இருவருமே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர். (உ—15)

மாவீரர் நாள் - 1994

ஏற்பாடுகள் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 11

தமிழீழ மக்களின் விடிவுக்காகவீரச்சாவு கண்ட மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நவம்பர் 27 ஆம் நாள் ஆகும்.

நவம்பர் 15 ஆம் நாள் முதல் 20 ஆம் நாள் வரை மாவீரர் எழுச்சி வாரமாக இருக்கும்.

நவம்பர் 21 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை மாவீரர் வாரமாக இருக்கும்.

மாவீரர் எழுச்சி வாரத்திலும், மாவீரர் வாரத்திலும், இடம் பெற வேண்டிய செயற்பாடுகள், நிகழ்வுகள் குறித்து விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் விடுத்த செய்திக் குறிப்பு கீழே பிரசுரமாகி உள்ளது.

"தேச விடுதலைக்காய், முற்றாகத் தம்மை அர்ப்பணித்து, உயிரினை, ஈந்து, உடலை உரமாக்கி, வரலாறு படைத்து, தமிழீழ மண்ணெங்கும் தடம் பதித்து, தேசத்தின் சோதியாக, விடுதலை உணர்வில் தீப்பிழம்பாக ஒளி தருபவர்கள் மாவீரர்கள்.

தமிழீழ மக்களின் விடிவிற்காக வீரச்சாவு கண்ட மாவீரர்களைநினைவுகூர்ந்து, எழுச்சிகொள்ளும், நவம்பர் 27 ஆம் நாள் மாவீரர் நாள் ஆகும்.

இந்நாள், தமிழனுடைய தேசிய நாளாகவும். தமிழனுடைய வாழ்க்கையோடு ஒன்றிய பண்பாட்டு நாளாகவும் நிலைத்து நிற்கின்றது.

தமிழனின் தொன்மையான பண்பு வீரத்தைப் போற்றுவது, வீரத்திற்கு, ஈகத்திற்கு தமிழன் விழாவெடுக்கின்றான். அவன் சோகத்தில் தன்னைக் கரைத்துவிடவில்லை; எனவேதான் இந்நாள் தேசிய நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருட மாவீரர் நாளை, உணர்வுகள் கரைபுரண்டு எழுச்சி கொள்ளும் வண்ணம், ஒழுங்கமைத்து, முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்கூட்டியே வகுக்கப்படுகின்றன.

தமிழீழத்தின் கிராமிய அமைப்புகள், வெகுஜன அமைப்புகள், திட்டமிட்டு செம்மையாக, செயற்படுத்த முனைப்புடன் தயாராகின்றன.

மாவீரர் எழுச்சி வாரம்

நவம்பர் 15 முதல் 20 வரையிலான வாரம், மாவீரர் எழுச்சி வாரமாக, துரிதச் செயற்பாட்டு வாரமாக விளங்கும்.

சிரமதானங்கள்

மாவீரர் துயிலும் இல்லங்கள், சாலைகள், ஒழுங்கைகள் சிரமதானப் பணிகள் மூலம் புதுப்பொலிவு பெறும். எங்கும் புனிதம் பொங்க வேண்டும். சிவப்பு, மஞ்சள் கொடிகளால் வீதிகள் அலங்கரிக்கப்படல் வேண்டும்.

வளைவுகள், பதாகைகள்:

போராட்ட வரலாற்றை, சம்பவங்களைக் கூறும் வளைவுகள், மாவீரர் புகழ் பாடும் வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் நிர்மாணிக்கப்படுதல்— நவம்பர் 15ஆம் திகதியன்று பூர்த்தியாக வேண்டும்.

வளைவுகள் குறைந்தது 22 அடிக்கு 18 அடி எனும் அளவுப் பிரமாணங்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும். உணர்வுகளை தட்டியெழுப்பும் வாசகங்களுடன் கூடிய கவரொட்டிகளும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஒட்டப்படுதல் வேண்டும்.

கருத்தரங்குகள், எழுச்சி வீதி நாடகங்கள்:

மாவீரர் நிகழ்வுகளில் மக்களை உணர்வு பூர்வமாக, முழுமையாகப் பங்கேற்க கருத்துக்களை வெளியிடும் கருத்தரங்குகள், எழுச்சி வீதி நாடகங்கள் வெகுஜன அமைப்புக்களால் ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

மாவீரர் நாளின் முக்கியத்துவத்தை உணர்த்தித் தயார்ப்படுத்துவதுடன், மாவீரர் எழுச்சிவாரம் நிறைவுறும்.

மாவீரர் வாரம்:

தனக்கென வாழாது, மற்றவர்களுக்காக வாழும் உயரிய பண்பை, முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி, வித்தாகிய தன் மூலம் தமிழீழத்தில் முழுமையான மனிதனின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்ற மாவீரர்களது ஒளியூட்டலில், தமிழீழம் முழுவதும் எழுச்சிகொண்டு விடுதலைக்கீதங்கள் ஒலிக்க, எங்கும் அஞ்சலி நிகழ்வுகள் மாவீரர் வாரமாகிய நவம்பர் 21முதல், 27 வரை இடம் பெறும்.

இவ்வாரத்தில் தேவையற்ற களியாட்டங்கள் தவிர்க்கப்படல்வேண்டும். சமூகநலனுக்கான பணிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தமிழீழ மக்கள் ஒரே நோக்கில் செயற்படுவர்.

தேசியக்கொடியேற்றல்:

மாவீரர் வார முதல்நாளாகிய நவம்பர் 21ஆம் நாள் காலை 9.00 மணிக்கு 22அடிக் கம்பத்தில், எமது குறிக்கோளைச் சூட்டி நிற்கும், எமது தேசியக்கொடி, இணைக்களங்கள், வங்கிகள், கூட்டுத்தாபன அலுவலகங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், தொழிற்சங்கங்கள், மாதர் அபிவிருத்திக் கழகங்கள் ஆகியவற்றில் "ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற பாடல் இசைக்க ஏற்றப்படும்.

தேசியக்கொடி பெறவிரும்புபவர்கள், 19ஆம் திகதிக்கு முன்னர் கோட்டம், வட்ட அரசியல்துறைப் பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

மரியாதை வணக்கம் செலுத்துதல்

மாவீரர் வாரநாட்களில், சனசமூக நிலையங்களில், பாடசாலைகளில், பொது அமைப்புகளின் அலுவலகங்களில், மற்றும் ஏனைய நிறுவனங்களில் மாவீரர்களது உருவப்படங்கள் பந்தலிட்டு வைக்கப்படும். உருவப்படங்கள் புனிதமாக அலங்கரிக்கப்பட்டு, மலரிடப்பட்டு, மரியாதை வணக்கம் செலுத்தப்படும்.

மேலும் வட்டாரியாகச் சிறப்புற அமைக்கப்படும் மாவீரர் பந்தல்களில் வைக்கப்பட்டுள்ள மாவீரர் உருவப் படங்களுக்கு தமது உளந்தோய்ந்த வணக்கத்தைச் செலுத்துவர்.

நினைவு நிகழ்ச்சிகள்

மாவீரர் வாரத்தின்போது, மாவீரர் விரவணக்கக் கூட்டங்கள், மாவீரர் மேன்மையை எடுத்தியம்பும் கலை நிகழ்வுகள், கவிதை அரங்குகள் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பெறும்.

நினைவு ஒலி எழுப்பல்

நவம்பர் 26 ஆம் நாள் நள்ளிரவு தாண்டும் வேளையில், தமிழர் தேசிய நாளாம் 27 ஆம் நாள் உதயமாகும் போது ஆலயமணிகள் சரியாகப் 12மணி ஒரு செக்கனுக்கு மாவீரர் நினைவு ஒலி எழுப்ப, எம்மினிய மக்கள் எல்லோரும் - எழுந்து நின்று 2 நிமிட மௌன வணக்கம் செலுத்தி, 12 மணி, 2 நிமிடத்திற்கு நிறைவு செய்வர். (இச்சந்தர்ப்பத்தில் நடந்து செல்பவர்கள், வாகனங்கள், இயங்கும் அனைத்தும் தரித்து அமைதியாகி மௌன வணக்கத்தில் ஆழ்ந்து பங்கேற்பர்.)

கூடரேற்றல்

மாவீரர் நினைவொலி நிறைவுபெற. மாவீரர் கூடரேற்றல் நிகழ்வு தொடரும். மாவீரர் துயிலுமில்லங்களில், பொதுஇடங்களில், பணிமனைகளில், பாடசாலைகளில், இல்லங்களில், வணிக நிலையங்களில் மக்கள் திரண்டு உணர்வு கொப்பளிக்க, மாவீரரை நினைவிலுருத்தி நெய்விளக்கேற்றுவர்.

பொதுக்கூட்டம்

மாவட்ட ரீதியாக மாவீரர் நினைவுப் பொதுக்கூட்டம் இடம்பெறும். பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழீழ மக்கள் திரண்டு வருவர். 27ஆம் நாள் 5-00 மணிக்குப் பின்னர் மாவீரர் நிகழ்வுகள் தேசியக்கொடி இறக்கப்படுவதுடன் நிறைவு பெறும்.

தமிழீழ மக்கள் மேற்கொண்டுவரும் விடுதலைப் போராட்டமானது அறத்தின்பாற்பட்டது, மனிதத்தர்மத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவது, தேசிய சுதந்திரம் எனும் இலட்சிய வேட்கையைப் பிரதிபலிப்பது.

இக்குறிக்கோளை அடைய வழிகாட்டிகளாக, தடைகளை அகற்றி, விடுதலைப் பாதையைச் சீரமைத்துத் தரும் உருக்குப் போன்ற உறுதி கொண்ட மாவீரர்களது நினைவுகளை நெஞ்சத்திருத்தி, எம்மை மீளவும் அர்ப்பணிக்கும் வகையில் இவ்வருட மாவீரர் நாள், தமிழீழ மக்கள் அனைவரும் மனப்பூர்வமாகப் பங்கேற்கும் நிகழ்வாக விளங்க வேண்டுமென்றக் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகுதி அடிப்படையில்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணசிங்க	—	187
ஹட்சன்	—	151
ஹரிச்சந்திர	—	344
கலப்பதி	—	107

ஜா—எல

சந்திரிகா	—	44,166
சிறிமா	—	24,208
ரணசிங்க	—	236
ஹட்சன்	—	152
ஹரிச்சந்திர	—	266
கலப்பதி	—	105

நீர்கொழும்பு

சந்திரிகா	—	31,648
சிறிமா	—	22,132
ரணசிங்க	—	172
ஹட்சன்	—	184
ஹரிச்சந்திர	—	133
கலப்பதி	—	86

மீரிகம

சந்திரிகா	—	40,288
சிறிமா	—	22,585
ரணசிங்க	—	208
ஹட்சன்	—	247
ஹரிச்சந்திர	—	270
கலப்பதி	—	222

அத்தனகலை

சந்திரிகா	—	51,923
சிறிமா	—	17,437
ரணசிங்க	—	206
ஹட்சன்	—	396
ஹரிச்சந்திர	—	374
கலப்பதி	—	175

மினுவாங்கொட

சந்திரிகா	—	42,041
சிறிமா	—	22,839
ரணசிங்க	—	233
ஹட்சன்	—	299
ஹரிச்சந்திர	—	252
கலப்பதி	—	121

வத்தளை

சந்திரிகா	—	37,373
சிறிமா	—	23,671
ரணசிங்க	—	214
ஹட்சன்	—	180
ஹரிச்சந்திர	—	183
கலப்பதி	—	99

மஹர

சந்திரிகா	—	46,496
சிறிமா	—	21,935
ரணசிங்க	—	235
ஹட்சன்	—	251
ஹரிச்சந்திர	—	311
கலப்பதி	—	188

கம்பஹா

சந்திரிகா	—	51,191
சிறிமா	—	20,094
ரணசிங்க	—	246
ஹட்சன்	—	215
ஹரிச்சந்திர	—	403
கலப்பதி	—	147

குருநாகல் மாவட்டம்

மாவத்தகம

சந்திரிகா	—	28,057
சிறிமா	—	16,635
ரணசிங்க	—	124
ஹட்சன்	—	348
ஹரிச்சந்திர	—	177
கலப்பதி	—	135

பொல்காவலை

சந்திரிகா	—	23,447
சிறிமா	—	17,030
ரணசிங்க	—	108
ஹட்சன்	—	216
ஹரிச்சந்திர	—	165
கலப்பதி	—	96

கல்கமுக

சந்திரிகா	—	33,011
சிறிமா	—	19,033
ரணசிங்க	—	130
ஹட்சன்	—	377
ஹரிச்சந்திர	—	164
கலப்பதி	—	176

குளியாப்பிட்டிய

சந்திரிகா	—	29,638
சிறிமா	—	22,999
ரணசிங்க	—	146
ஹட்சன்	—	295
ஹரிச்சந்திர	—	167
கலப்பதி	—	104

குருநாகல்

சந்திரிகா	—	24,685
சிறிமா	—	17,005
ரணசிங்க	—	151
ஹட்சன்	—	188
ஹரிச்சந்திர	—	158
கலப்பதி	—	91

தம்பதெனிய

சந்திரிகா	—	30,516
சிறிமா	—	20,613
ரணசிங்க	—	151
ஹட்சன்	—	244
ஹரிச்சந்திர	—	170
கலப்பதி	—	112

யாப்பஹுவ

சந்திரிகா	—	33,582
சிறிமா	—	22,593
ரணசிங்க	—	118
ஹட்சன்	—	367
ஹரிச்சந்திர	—	157
கலப்பதி	—	166

பிங்கிரிய

சந்திரிகா	—	27,377
சிறிமா	—	19,915
ரணசிங்க	—	103
ஹட்சன்	—	233
ஹரிச்சந்திர	—	109
கலப்பதி	—	105

நிக்கவெரட்டிய

சந்திரிகா	—	30,415
சிறிமா	—	17,932
ரணசிங்க	—	117
ஹட்சன்	—	294
ஹரிச்சந்திர	—	145
கலப்பதி	—	164

வாரியபொல

சந்திரிகா	—	25,612
சிறிமா	—	14,862
ரணசிங்க	—	87
ஹட்சன்	—	232
ஹரிச்சந்திர	—	118
கலப்பதி	—	102

பண்டுகஸ்நுவர

சந்திரிகா	—	23,158
சிறிமா	—	15,482
ஹட்சன்	—	234
ஹரிச்சந்திர	—	114
கலப்பதி	—	109
ரணசிங்க	—	103

கட்டுகம்பொலை

சந்திரிகா	—	33,532
சிறிமா	—	19,095
ரணசிங்க	—	114
ஹட்சன்	—	224
ஹரிச்சந்திர	—	152
கலப்பதி	—	101

தொடங்கஸ்லந்த

சந்திரிகா	—	20,241
சிறிமா	—	14,374
ரணசிங்க	—	100
ஹட்சன்	—	322
ஹரிச்சந்திர	—	143
கலப்பதி	—	171

கிரியெல்ல

சந்திரிகா	—	28,189
சிறிமா	—	20,880
ரணசிங்க	—	121
ஹட்சன்	—	405
ஹரிச்சந்திர	—	178
கலப்பதி	—	148

வன்னி மாவட்டம்

வவுனியா

சந்திரிகா	—	16,861
சிறிமா	—	3,026
ரணசிங்க	—	63
ஹட்சன்	—	499
ஹரிச்சந்திர		78
கலப்பதி	—	78

மன்னார்

சந்திரிகா	—	14,607
சிறிமா	—	981
ரணசிங்க	—	12
ஹட்சன்	—	490
ஹரிச்சந்திர	—	24
கலப்பதி	—	35

முல்லைத்தீவு

சந்திரிகா	—	1,128
சிறிமா	—	330
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	13
ஹரிச்சந்திர	—	03
கலப்பதி	—	04

மட்டக்களப்பு மாவட்டம்

கல்குடா

சந்திரிகா	—	41,821
சிறிமா	—	3,931
ரணசிங்க	—	70
ஹட்சன்	—	1,737
ஹரிச்சந்திர	—	99
கலப்பதி	—	183

மட்டக்களப்பு

சந்திரிகா	—	59,814
சிறிமா	—	9,812
ரணசிங்க	—	239
ஹட்சன்	—	1,683
ஹரிச்சந்திர	—	145
கலப்பதி	—	194

பட்டிருப்பு

சந்திரிகா	—	40,489
சிறிமா	—	631
ரணசிங்க	—	59
ஹட்சன்	—	1,611
ஹரிச்சந்திர	—	102
கலப்பதி	—	107

திருகோணமலை மாவட்டம்

சேருவில

சந்திரிகா	—	20,631
சிறிமா	—	11,726
ரணசிங்க	—	60
ஹட்சன்	—	415
ஹரிச்சந்திர	—	85
கலப்பதி	—	111

மூதூர்

சந்திரிகா	—	25,721
சிறிமா	—	11,209
ரணசிங்க	—	82
ஹட்சன்	—	946
ஹரிச்சந்திர	—	74
கலப்பதி	—	120

திருகோணமலை

சந்திரிகா	—	28,900
சிறிமா	—	3,925
ரணசிங்க	—	51
ஹட்சன்	—	697
ஹரிச்சந்திர	—	112
கலப்பதி	—	85

யாழ்ப்பாண மாவட்டம்

சாவகச்சேரி

சந்திரிகா	—	63
சிறிமா	—	06
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	01
ஹரிச்சந்திர	—	00
கலப்பதி	—	00

பருத்தித்துறை

சந்திரிகா	—	08
சிறிமா	—	00
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	00
ஹரிச்சந்திர	—	00
கலப்பதி	—	00

கிளிநொச்சி

சந்திரிகா	—	174
சிறிமா	—	09
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	00
ஹரிச்சந்திர	—	01
கலப்பதி	—	02

மானிப்பாய்

சந்திரிகா	—	18
சிறிமா	—	00
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	00
ஹரிச்சந்திர	—	00
கலப்பதி	—	00

காங்கேசன்துறை

சந்திரிகா	—	116
சிறிமா	—	06
ரணசிங்க	—	01
ஹட்சன்	—	03
ஹரிச்சந்திர	—	01
கலப்பதி	—	00

நல்லூர்

சந்திரிகா	—	21
சிறிமா	—	02
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	00
ஹரிச்சந்திர	—	00
கலப்பதி	—	00

யாழ்ப்பாணம்

சந்திரிகா	—	1,143
சிறிமா	—	108
கலப்பதி	—	04
ரணசிங்க	—	01
ஹரிச்சந்திர	—	01
ஹட்சன்	—	15

உடுப்பிட்டி

சந்திரிகா	—	24
சிறிமா	—	02
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	00
ஹரிச்சந்திர	—	00
கலப்பதி	—	00

வட்டுக்கோட்டை

சந்திரிகா	—	539
சிறிமா	—	08
ரணசிங்க	—	00
ஹட்சன்	—	31
ஹரிச்சந்திர	—	06
கலப்பதி	—	00

ஊர்காவற்றுறை

சந்திரிகா	—	14,761
சிறிமா	—	83
ரணசிங்க	—	14
ஹட்சன்	—	291
ஹரிச்சந்திர	—	27
கலப்பதி	—	17

அளவையியல் சேவைக்கால பயிற்சி

ஜி. சி. ஈ. (உயர்தர) வகுப்புக்களில் அளவையியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அளவையியலும் விஞ்ஞான முறையும் சம்பந்தமான சேவைக்காலப் பயிற்சி நாளையும், மறுதினமும் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும். (உ)

தேர்வுக்கு ஏற்பாடு

முதலிலை, இளநிலை தேர்வுக்கு பிரதம மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் தத்தமது கல்விக்கோட்டங்களில் இன்று காலை 10 மணிக்கு தேர்வுக்கான ஆவணங்களைப் பெற்று குறிப்பிட்ட தேர்வு நிலைய பாடசாலைகளின் அதிபர்களின் ஒத்துழைப்புடன் தேர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார். (உ)

யம பயம்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைப்போது மலர் தூவி காதலித்து முப்போதும் வணங்கி வழிபட்டு உய்வடைய முயல்வோமாக.

இவ்வகையான சிறப்பு வாய்ந்த ஓர் உற்சவத்தை ஆலய ஆதீனகர்த்தா சிவஸ்ரீ சோ. சோமஸ்கந்த குருக்களும், அவர் தம் புத்திரர்களும், அவர்களுக்கு உறுதுணையாக ஆலயத்தோடு ஈடுபாடுடைய இளைஞர்களும், மற்றும் அன்பர்களும் பல சிரமங்களின் மத்தியில் நடத்துவதற்கு முன் வந்தது பாராட்டுதற்குரியது. இந்த உற்சவத்தைதரிசிப்பதற்கு நாம் எத்தனையோ சிவபுண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

காலனைக் காலாலு...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி).

பக்கத்தில் செல்வதற்குக்கூட யமன் அஞ்சுவான். சிவனடியார்கள் தமது அந்திய காலத்தில் சிவகணங்களினால் கைலாசத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

ஆகவே அன்பர்கள் அனைவரும் இவ்விழாவினைத் தரிசித்து எம்பெருமான் புகழ் பாடி யமபயம் நீங்கி இன்புற்றிருப்பார்களாக.

★ சுபம் ★

குலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயிலுறை யுமெம் மாதியே.
மேனமைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளுக்கு நல்லதோர் படிப்பினை

ஏ.ஜே. ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

"நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது தீர்ப்பைத் தெளிவாக வழங்கியுள்ளனர். அரசியல்வாதிகளுக்கும் ஏனையோருக்கும் இது ஓர் நல்ல படிப்பினையாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட ஏ. ஜே. ரணசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் மூலம் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை அவர் மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று திரு. ரணசிங்க வேண்டுகோள் விடுத்தார். (ஐ-4)

ஜனாதிபதிமுறையை ஒழிக்க மக்கள் அளித்த அங்கீகாரம்

நிஹால் கலப்பதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 11

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதை நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேர்தல் மூலம் அங்கீகரித்துள்ளனர்—என்று இலங்கை முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நிஹால் கலப்பதி தெரிவித்துள்ளார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா இச் சந்தர்ப்பத்தில் தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் எனத் தெரிவித்த அவர் தேர்தலில் தமக்கு ஆதரவாக வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். (ஐ-4)

சந்திரிகா ஆதரவாளரின் ஆதங்கம்

மணிலா, நவ. 11

ஊரடங்கு அமுலில் இருப்பதால் தங்களின் வெற்றியைக் கொண்டாட முடியாது போனதாக சந்திரிகாவின் ஆதரவாளர்கள் நேற்றுத் தெரிவித்தனர். (உ-3)

பொது விடுமுறை

கொழும்பு, நவ 11

நேற்று வியாழக்கிழமை அரச, வங்கி விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக அரசு நேற்று அறிவித்தது அத்துடன் அரசாங்கம் தனியார் துறையினருக்கு விடுத்த வேண்டுகோளில் நேற்றையதினத்தை வர்த்தக விடுமுறை தினமாகவும் கருதும் படியும் கேட்டுள்ளது. (ஐ)

ஊரடங்கு

ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6மணிக்கு நீக்கப்படும் என்றும்—

மீண்டும் இன்று மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு நாளை காலை 6 மணிக்கு நீக்கப்படும் என்றும்—பாதுகாப்பு அமைச்சு நேற்று இரவு அறிவித்தது. (இ-3)

கரை ஒதுங்கிய மனிதக்கால்கள்

வடமராட்சி கிழக்கு மணல்காட்டுக்கும் குடத்தனைக்குமிடையில் கடற்கரையில் இரண்டு மனிதக் கால்கள் கரையொதுங்கியுள்ளன.

நேற்று அதிகாலை கடற்கரைக்குச் சென்ற மீனவர்கள் கரையொதுங்கிய கால்களைக் கண்டு கடற்புலிகளுக்கு தகவல் கொடுத்ததையடுத்து கடற்புலிகள் அக் கால்களை எடுத்துச் சென்றனர் என்று தெரியவந்தது. (இ-117)

மாவட்ட அடிப்படையில் தேர்தல் முடிவுகள்

மாவட்டம்	சந்திரிகா	சிறிமா	ரணசிங்க	ஹட்சன்	ஹரி	கலப்பதி
மாத்தளை	1,21,649	73,324	608	2,111	992	680
இரத்தினபுரி	2,57,265	1,77,924	1,235	3,451	1,877	1,279
பொலநறுவை	88,907	59,288	258	1,126	428	469
கேகாலை	2,11,676	1,59,707	1,020	2,759	1,401	1,028
வன்னி	33,585	4,493	77	1,003	96	1,018
பதுளை	1,82,810	1,39,611	1,387	3,841	1,742	1,372
களுத்துறை	2,95,686	1,78,466	1,398	2,213	1,868	1,388
மட்டக்களப்பு	1,44,725	14,212	381	5,028	341	484
மாத்தறை	2,27,865	1,18,224	1,134	2,055	1,564	1,397
திருகோணமலை	77,943	28,006	195	2,074	279	324
மொனறாகலை	96,620	52,026	556	1,966	871	824
திகாமடுல்ல	1,67,289	59,074	4,999	3,377	472	577
காலி	2,85,398	1,73,282	1,179	1,885	1,584	1,487
நுவரெலியா	1,68,920	1,16,928	1,083	6,214	1,332	1,044
கண்டி	3,20,110	2,35,619	1,752	3,748	2,618	1,270
அனுராதபுரம்	2,00,146	1,07,342	678	2,534	1,014	1,083
யாழ்ப்பாணம்	16,934	223	16	341	36	25

தேர்தல் வெற்றியை புலிகளுடன் பேச்சை தொடரும் ஆணையாக சந்திரிகா கருதலாம்

பி. பி. ஸி. கண்ணோட்டம்

கொழும்பு, நவ. 11

விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுக்களை தொடர்ந்து நடத்த மக்கள் தமக்கு தந்த ஆணையாக ஜனாதிபதி தேர்தல் முடிவை, புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா வியாக்கியானம் செய்யலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து பி.பி.ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி, தேர்தல் முடிவு குறித்த தமது முதலாவது கண்ணோட்டத்தில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

காமினி திஸாநாயக்காவின் படுகொலையை நடத்தியது விடுதலைப் புலிகள் தான் என்ற பலத்த சந்தேகங்களுக்கு மத்தியிலும் — விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து சமாதானப் பேச்சுகளை நடத்த இவ் வெற்றியை அவர் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்

மாவட்டம்	சந்திரிகா	சிறிமா	ரணசிங்க	ஹட்சன்	ஹரி	கலப்பதி
திருகோணமலை	2,701	1,146	02	16	08	08
நுவரெலியா	3,696	2,707	10	03	32	10
மாத்தறை	5,874	2,351	33	13	57	30
பதுளை	6,239	3,355	20	09	62	38
அநுராதபுரம்	7,676	6,099	18	23	60	40
மொனராகலை	3,349	1,268	07	05	20	23
பொலன்நறுவை	2,286	1,336	09	07	13	16
காலி	9,186	4,320	33	14	82	63
வன்னி	989	156	02	01	01	01
கண்டி	10,517	6,881	38	31	102	45
களுத்துறை	9,049	4,533	34	09	98	42
கொழும்பு	15,993	6,659	97	19	246	56
இரத்தினபுரி	5,209	3,171	17	07	44	21
மாத்தளை	3,954	2,372	05	10	44	17
கம்பஹா	16,177	6,847	51	20	190	57
கேகாலை	7,826	4,945	15	11	57	34
அம்பாந்தோட்டை	4,038	1,820	24	13	45	71
குருநாகல்	12,412	7,992	41	21	95	62
மட்டக்களப்பு	2,601	439	06	03	03	00
புத்தளம்	3,633	1,883	19	18	14	00
யாழ்ப்பாணம்	56	0	0	0	0	0

தேர்தலிலிருந்து ஒதுங்கிய கலப்பதிக்கும் வாக்குகள்

இனவாதம் கக்கிய 'பூமிபுத்ர' படுதோல்வி

கொழும்பு, நவ. 11

ஜே. வி. பி. வேட்பாளர் நிஹால் கலப்பதி கடைசி நேரத்தில் தேர்தலில் இருந்து ஒதுங்கிக் கொண்ட போதிலும் ஒவ்வொரு தொகுதியிலும் அவருக்கும் வாக்குகள் கிடைத்திருந்தன.

வாக்குச் சீட்டில் அவரது பெயர் அச்சிடப்பட்டிருந்ததே இதற்குக் காரணம்.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக சந்திரிகா குமாரதுங்க உறுதி அளித்ததன் பேரில் நிஹால் கலப்பதி தேர்தலில் இருந்து விலகி இருந்தார்.

தேர்தல் தினத்துக்கு முதல் நாள், தாம் தேர்தலில் இருந்து விலகி இருப்பதால் தமக்கு வாக்களிக்க வேண்டாம் என்று நிஹால் கலப்பதி செய்திச் சாதனங்கள் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் ஏற்கனவே அச்சாகியிருந்த வாக்குச் சீட்டுக்களில் அவரது பெயரும் இருந்ததால்அவருக்குவாக்குகள் கிடைத்திருந்தன.

அதே சமயம் தேர்தலில் தமிழருக்கு எதிராக வகுப்புவாதம் கக்கிய "சிங்கள மகா சம்மத பூமிபுத்ர" வேட்பாளர் டாக்டர் ஹரிச்சந்திர விஜேதுங்கா மிகக் குறைந்த வாக்குகளே பெற்றார்.

அனேகமான தொகுதிகளில் அவருக்கு கிடைத்த வாக்குகள் 100 இல் இருந்து 300 வரையுமே.

ஜனாதிபதித்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பற்றிய இறுதி அறிவிப்பை—புதிய ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டிருப்பது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை—தேர்தல் ஆணையாளர் நேற்று முற்பகல் 11-30மணியளவில் வெளியிட்டார்.

தேர்தல் முடிவு பற்றிய இறுதி அறிவிப்பை விடுக்கும் சம்பிரதாயபூர்வ வைபவம் நேற்று முற்பகல் 11-15மணியளவில் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சந்திரிகா குமாரதுங்க இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

தேர்தலில் [illegible] ஏனைய வேட்பாளர்களும் இந் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். (உ-எ)

அரசின்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளை — பெறுவதற்காகவே அந்தக் கட்சி நடத்தியது.

இப்பிரசாரங்களுக்கு பலியாகாது— சகிப்புத்தன்மையை கடைப்பிடித்து—இத்தெளிவான ஆணையை வழங்கியற்காக அரசாங்கமும் உலகமும் இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

சிங்கள பௌத்த மக்களிடமிருந்தும் ஏனைய இனமக்களிடம் இருந்தும் கிடைத்த மிகத் தெளிவான ஆணையாக இதனை அரசாங்கம் எடுத்துக் கொண்டு சமாதானத்தை அடைவதற்கு முன்னேறிச் செல்லும் என உறுதி கூற விரும்புகிறேன்.

சமாதானம் எந்த விலை கொடுத்தும் அல்ல; பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படும். அந்தத் தீர்வு சிங்கள பெரும்பான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாத்து பலப்படுத்துவதுடன், ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களும் அச்சமின்றி சம உரிமைகளைப் பெற்று வாழ வழிவகுக்கும்.

இந்தத் தேர்தலில் ஊழல், மோசடி, இனவாதம் ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் திட்டவட்டமான பதில் தந்திருக்கிறார்கள்.

மக்கள் வழங்கிய இத்தீர்ப்பின் அடிப்படையில் அடுத்த ஆண்டு ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் [illegible] ஜனாதிபதி ஆட்சி முறையை அடியோடு ஒழிக்க [illegible] கூறினார். (உ-எ)

அனுதாப...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடும்ப பாரம்பரியத்தை நிலை நிறுத்தும் வகையில் சந்திரிகாவும் நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதி என்ற சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

அவரது தாயார் சிறிமாவோ உலகின் முதலாவது பெண் பிரதமர் என்ற சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

தேர்தலுக்கு முதல் நாள் தாம் பத்து லட்சத்துக்கு அதிகமான வாக்குகளால் வெற்றியீட்டப் போவதாக சந்திரிகா உறுதியாகக் கூறியிருந்தார். ஆனால் சந்திரிகா 20 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

அனுதாப அலையில் ஆட்சியைப் பிடிக்கலாம் என்று நினைத்துக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் தாம் பெற்ற 44.04 சதவீத வாக்குகளில் 9 சதவீதத்தை நேற்று நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பறிகொடுத்துவிட்டது.

சந்திரிகா — சிறிமா ஆகியோரை எடைபோட்ட வாக்காளர்கள் திறமையை கணித்து சந்திரிகாவைத் தெரிவு செய்தனர். சிறிமாவை அரசியலுக்கு புதியவர் என்று வாக்காளர்கள் ஒதுக்கி விட்டனர்.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற தமது சமாதான முயற்சிக்கு மக்கள் அளித்த மாபெரும் ஆணையாக தேர்தல் முடிவை சந்திரிகா ஏற்றுக்கொண்டுள்ளார்.

இவ்வாறு நீட்டா செபஸ்தியன் தமது கண்டோட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

ஒரு தொகுதியில் மட்டும் சிறிமா வெற்றி பெற்றார்

தொகுதி வாரியாக வெளிவந்த தேர்தல் முடிவுகளின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா ஒரு தொகுதியில் மட்டும் வெற்றியீட்டி உள்ளார்.

பதுளை மாவட்டம் மஹியங்கனையில் சிறிமா திஸாநாயக்காவுக்கு 24 ஆயிரத்து 842 வாக்குகளும்—

சந்திரிகாவுக்கு 18ஆயிரத்து 217 வாக்குகளும் கிடைத்துள்ளன.

இத்தொகுதி சிறிமா திஸாநாயக்காவின் பிறந்த இடம் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

கடலுக்கு சென்ற மீனவர் திரும்பிவரவில்லை

குருநகர், நவ. 11

பூநகரி கல்முனைப் பகுதி கடலுக்கு கடந்த புதன் இரவு தொழிலுக்குச் சென்ற மீனவர்களின் வள்ளங்களில் ஒன்று கடும் காற்று மழை காரணமாக கடலில் மூழ்கியதாகவும்—

மற்றொரு வள்ளம் நேற்று மாலை வரை திரும்பிவரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அந்த வள்ளத்தில் இருந்த றெக்கிளமேஷன் வீதியைச் சேர்ந்த நோன்ஸ் பிலிப்நேரி (வயது- 34), மிக்கேல் பிறஞ்சிமுத்து (வயது 58) சனித்கிளாஸ் அஜித் (வயது 15) பாக்கியராசா அசோகன் (வயது 16) ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இதேவேளை—

கடலில் மூழ்கிய வள்ளத்தில் சென்ற மூன்று மீனவர்களில் ஒருவர் நீந்திக்கரை சேர்ந்தார். ஏனைய மீனவர்களான றெக்கிளமேஷன் கடற்கரை வீதியைச் சேர்ந்த குமார் பெலின் (வயது 18), ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சேல்வராசா (வயது 35)ஆகிய இருவரும் நேற்று மாலை வரை கரைசேரவில்லை. (ஐ-51)

பிரதமர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழித்த பின்னர்' மீண்டும் நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டிய பிரதமர் ஆட்சி முறையின் கீழ் பிரதமர் பதவியைத் தான் ஏற்கும் வரை அதனைத் தற்காலிகமாக ஒருவருக்கு கையளிக்க வேண்டிய நிலை இருப்பதாலும் —

பிரதமர் பதவியை தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் சந்திரிகா குமாரதுங்க ஒப்படைக்கக் கூடும் என ஹேஸ்யம் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் சந்திரிகாவின் கீழான தற்போதைய அமைச்சரவையில் அமைச்சு குறித்தொதுக்கப்படாத அமைச்சராக ஸ்ரீமாவோ இருந்து வருகிறார். எனவே மகள் சந்திரிகா ஜனாதிபதி பதவியை ஏற்றதும் அவரின் கீழ் பிரதமராக இருப்பதற்கு தாயார் ஸ்ரீமாவோ ஆட்சேபனை தெரிவிக்கமாட்டார் என எதிர்பார்க்கலாம்.

★ ஸ்ரீமாவோ உடல்நலக் குறைவினால் பாதிப்புற்றுள்ள போதிலும், பிரதமர் பதவியை ஏற்றால் — பிரதமர் என்றவகையில் — அவர் ஆற்ற வேண்டிய பணி தற்போது அமைச்சுக் குறித்தொதுக்கப்படாத அமைச்சர் என்ற வகையில் ஆற்ற வேண்டிய பணியைவிட கூடுதலாக இருக்கப்போவதில்லை.

★ ஸ்ரீமாவோவை பிரதமர் பதவிக்கு நிறுத்துவதன் மூலம் பொ.ஐ.மு. அரசில் அப் பதவிக்கு ஏற்படக் கூடிய உட்கட்சிப் பூசலைத் தவிர்த்து விடலாம்.

★ ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டதும் சந்திரிகா மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும்போது —அதுவரை பிரதமர் பதவியிலிருந்த ஒருவர் அப்பதவியிலிருந்து வெளியேற்றப்படுவதால் எழக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்க்க முடியும். ஏனென்றால் தனது மகளுக்காக ஸ்ரீமாவோ அப்பதவியிலிருந்து விலகுவதாக அதனைக் கருத முடியும்.

இந்தக் காரணங்களினால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவே பெரும்பாலும் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

மேஜர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரன் — துன்னாலை) வித்துடல் கிடைத்துள்ளதாக மாவீரர் பணிமனை அறிவித்துள்ளது.

வித்துடல் இன்று முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும். வீரவணக்கக் கூட்டமும் அங்கு நடைபெறும்.

பின்னர் வித்துடல் அங்கிருந்து வடமராட்சி கோட்ட மாவீரர்துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு சகல இராணுவ மரியாதைகளுடன் வீரவிதைகுழியில் விதைக்கப்படும். (ஐ)

நரோமா கப்பல் சேவை நிறுத்தம்

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 'நரோமா' கப்பல்சேவை உடனடியாக நிறுத்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இக்கப்பலில் 15 ஆம் திகதியும் அதற்குப் பின்பும் பிரயாணம் செய்வதற்கு யாழ். செயகத்தில் பணம் செலுத்தியவர்கள் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

ஒப்புநோக்குனர் தேவை
(தமிழ், ஆங்கிலம்)

அச்சுப் பதிப்பில் முன்னணியில் திகழும் இராசன் அச்சகத்திற்கு, தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் ஒப்பு நோக்குனர்கள் தேவைப்படுகின்றனர். தகைமையுடையவர்கள், தகைமைச் சான்றிதழ்களுடன் 14 - 11 - 1994 அன்று மீழ்க்காணும் முகவரியில் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்விற்குகுச் சமுகமளிக்கவும்.

இராசன் அச்சகம்
144, அருச்சுனாசாலை, யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஆங்கிலம், தமிழ் மொழிகளில் ஒப்புநோக்கக் கூடிய ஆண்கள் எவரும் சமுகமளிக்கலாம்.

[33713]

மரண அறிவித்தல்கள்

திருமதி
பொன்னம்மா மகாலிங்கம்

அச்செழு, பெரியபுலத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா மகாலிங்கம் 10-11-94 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் மனைவியும் காலஞ்சென்ற ஆசிரியை பரமேஸ்வரி, ஆசிரியர் சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்றே நடந்தேறின.

தகவல்;
சகோதரன்

(சி/9657)

திருமதி மகேஸ்வரி சரவணபவன்

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி சரவணபவன் கனடாவில் இயற்கை எய்தி விட்டார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலு சரவணபவன் (ஓய்வுபெற்ற ஆசியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உருத்திரா, மகேந்திரா (அஸ்பெஸ்டஸ் சிமென்ற இன்டஸ்றீஸ்,இரத்மலானை), கஜேந்திரா (U.K), இரவீந்திரா (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்), ஹரிச்சந்திரா (U.K) சகுந்தலா, வனஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ம. சரஸ்வதி, திருமதி க. இந்திராணி (U. K). திருமதி இ. கிருஷ்சாந்தி (இராமநாதன் நுண்கலைப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்), ரஜீவன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், திருமதி இராஜஇராஜேஸ்வரி - கணேசர் (சறோ), வே. சண்முகதாசன் (கனடா) அவர்களின் சகோதரியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
ச. இரவீந்திரா
(மகன்)
ஞானப்பிரசாசர் வீதி,
உடுவில், சுன்னாகம். (33720)

திருமதி
எலிசபேத் ஜோசவ் (தங்கம்மா)

ஊர்காவற்துறை கரம்பனை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது மிருசுவிலில் வசித்துவந்த வருமான திருமதி எலிசபேத் ஜோசவ் 10-11-94 இல் காலஞ்சென்றுவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜேசுதாசன், அன்ரனிதாசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி வசந்தா, செல்வம் (ஆசிரியை, கண்டி), யசிந்தா றஞ்சினி (நீர்கொழும்பு), மேரி அனற் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், றெக்ஸ் வசந்தாவின் அன்பு மாமியாரும், கீதா, நிசாந்தினி, சத்தியறூபன், ஞானறூபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 12-11-94 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
இ. றெக்ஸ் ஜீவரட்டினம்
(மருமகன்)
மிருசுவில். (33719)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி,292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org